உ

சிவமயம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி கண்ணுத்துரை பூபதியம்மா

அவர்களின்

# நினைவஞ்சலி மலர்

19.08.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இத்தரணியில் அன்பு சுரந்து
இல்லறத்தை நல்லறமாக்கி
வாசம் குன்றா வாழ்வு தந்து
வளர்ச்சிக்கு வழிகாட்டினீர்

திரும்பும் இடமெல்லாம் நினைவு தந்து
ஆண்டவன் நிழலில்
அமரத்துவம் அடைந்த
எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் பாதம் பணிந்து வணங்கி
கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"தோன்றிற் புகழோடு தோன்றுக
அன்றேல் தோன்றலின் தோன்றாமை நன்று"

அன்னை மடியில்

25. 11. 1929.



ஆண்டவன் அடியில்

19. 08. 2015

# அமரர் திருமதி கண்ணுத்துரை பூபதியம்மா அவர்கள்

## திதிவெண்பா

ஆண்டு மன்மதவதனிலானதொரு நற்றிங்கள் ஆவணி பத்தொன்பதாம் நாள்
பூர்வபக்க பஞ்சமி திதிதனில் - நீண்ட நல்லறம்
தேடிச்சிறந்த தவமுடையாள் பூபதியம்மா
சொர்க்க வாசல் திறக்க வைகுண்டம் சேர்ந்தார் சிறந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயக வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

## தேவாரம்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடிய டைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே

## திருவாசகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் லஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவர் காணந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரிவினார் பணிந்தார்

## திருப்புகழ்

தனதனன தனன தந்தத் தனதான
இருவினையின் மதி யங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

## சிவபுராண சிறப்பு வெண்பா

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே -- எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

### சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வப் புதல்வர்களின் கண்ணீர் அஞ்சலி

அன்பு அம்மா!

வார்த்தைகளே இல்லாத வடிவம்
அளவுகோலே இல்லாத அன்பு
சுயநலமே இல்லாத இதயம்
எப்போதும்,
புன்சிரிப்பையே நிரந்தரமாக்கிய முகம்

எங்களை எப்போது பார்த்தாலும் கேட்கும் ஒரு கேள்வி
"சாப்பிட்டீர்களா?"

நீங்கள் எங்களின் மட்டுமல்ல, எங்கள் மனைவி, பிள்ளைகளிலும் கொண்டிருந்த அன்பும், அக்கறையும் மனதை நெகிழ வைக்கின்றது.

அம்மா!
நீங்கள் இவ்வுலகை விட்டுச் சென்றிருக்கலாம் - ஆனால் எம் இதயங்களை விட்டு அகலவில்லை.

மீண்டுமொரு பிறப்புண்டேல் உங்களுக்கே பிள்ளைகளாகப் பிறக்கும் வரம் வேண்டும்.

M – Moral Values
O – Obedience
T – Trueness
H – Honoring
E – Ethics
R – Respecting

**ரவி, பாலன், ராஜன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மா,**

இந்த வார்த்தையின் முழு அர்த்தத்தையும் எங்களுக்கு உணர வைத்தீர்கள் - எங்களைச் சரியான பாதையில் செல்ல இறுதி வரை வழி நடத்தினீர்கள்.

அமைதியும், கண்டிப்பும், எல்லோரையும் வரவேற்று உபசரிக்கும் உங்கள் குணமும் இப்பொழுது நினைக்கும்போது எங்களை பிரமிக்க வைக்கின்றது.

அம்மா உங்களுக்கு நாங்கள் என்றுமே குழந்தைகள் தான்.

இந்தக் குழந்தைகளையும் எங்கள் குழந்தைகளையும், உங்கள் மருமக்கள் எல்லோரையும் தெய்வமாக இருந்து வழி நடத்துவீர்கள் என நம்புகின்றேன்.

அன்பின் உருவம் நீங்கள்
பாசத்தின் உறைவிடம் நீங்கள்
அரவணைப்பின் வடிவம் நீங்கள்
புன்சிரிப்பின் முகம் நீங்கள்
பொறுமையின் சிகரம் நீங்கள்
எங்கள் குடும்பத்திற்கே அறிவு கொடுத்த சரஸ்வதி நீங்கள்
எங்கள் குடும்பத்தின் குத்துவிளக்கே
நீங்கள் தான் அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

**இந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பு அம்மா**

உங்கள் மகளின் தாங்க் முடியாத துயரம்!
மின்னாமல்,முழங்காமல் இறையடி சேர்ந்தீர்களே!
உங்களுக்காக நான் கோவில் கோவிலாகச் சென்று
செய்த பிரார்த்தனைகள் எத்தனை எத்தனையோ!
அம்மா
வான் மறந்தாலும் வளர்மதியை – வண்ணமலர்
தேன் மறந்தாலும் அம்மா
தடையின்றி ஓடும் குருதியினை
ஊன் மறந்தாலும்
நான் எப்படி அம்மா மறப்பேன் உங்களை!
உணர்வைத் தொட்ட நினைவுகள் உள்ளத்தில்
என்றும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும்
அம்மா! நான் எவ்வளவு துன்பத்தோடு இருந்தாலும்
உங்கள் குரல் உங்கள் முகம் பார்த்தும்
எனது துன்பங்களை மறந்து விடுவேன் இனி
எப்போ அம்மா நான் உங்களை பார்ப்பேன்
தாங்க முடியாத துயரத்தில் இருக்கும்

உங்கள் அன்பு மகள்
**வசந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசை அம்மாவே!**

அன்போடு எனைப்பேணி
ஆதரவாய்க் காத்து
எல்லைஇல்லாத அன்பை
என்மீதுசொரிந்து –
எண்ணி எண்ணிஏங்கவைத்து
எங்கு அம்மா சென்றீர்கள்

அன்பு, அக்கறை, அரவணைப்பு,
பாசம், நேசம், தியாகம் என
எல்லா உணர்வுகளையும் உங்கள் ஒருவரிடம் இருந்து
என்னால் பெற முடிந்தது.

அம்மம்மா எங்கே என என்
பிள்ளைகள் கேட்டால் நான்
என்ன பதில் சொல்வேன்?

ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்
அம்மா உங்களைப்போன்று
அன்பு செய்ய யாரும் இல்லை.

உங்கள் இடத்தை நிரப்ப
இனி யாராலும் முடியாது

துயரத்துடன்
**மகள் சுகந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மாவின் பாதங்களுக்கு**

ஆண்டு ஆண்டாய் ஆதவனை
வலம் வந்த வண்ணநிலா - இன்று
ஆதங்கத்தோடு ஆவலாய் அவர்
பாதம் பற்றிக் கொண்டது

அம்மா!
பலருக்கு தொப்புள்கொடி உறவு
சிலருக்கு ஊட்டிய பாலின் நெருடிய பிணைப்பு

ஆனால் எம் ஏழ்வருக்கோ!
வாழ்வின் முதல் வரி!
அன்பின் மறு அவதாரம்

அம்மா!
பணத்தின் அரவணைப்பில்
தொடங்கியது இவர் இளமைக்காலம்
பாசத்தின் இணைப்பில் தொடர்ந்தது
இல்லறப் பயணம்

ஆனால் - எம் ஏழ்வரை ஈன்று
அவர் வளர்ச்சிகளில், தேவைகளில்
நிறைவு கண்டபோது
பணம் உதவிக்கு வர மறுத்தது

அரசாங்க ஊதியத்தில்
கொழும்புப் பொருளாதாரத்தில்
ஆட்டம் கண்டது இல்லற வாழ்வு

தயங்கவில்லை, தளரவில்லை
உதவிக்கு வரா உற்றார் உறவினரைமீறி
வீறுநடைபயின்றது இவர்கள்
திடமிகு வாழ்க்கைப் பயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மா!**

உயர்படிப்பில் அவர் பாதம் பதியவில்லை
உயரிய பட்டம் ஏதும் பெறவில்லை
ஆனால் வரவு செலவுகளில் இவர் திறமை
குடும்பத்தை நெறிப்படுத்திய தலைமை
ஓர் துரும்புக்கும் தீங்கு நினையா அவர் கருணை
ஆம்,
ஓர் குடும்பத்தலைவிக்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு
வந்தவர் உண்ணாமல் போனதில்லை
உறவினர் உறங்காமல் திரும்பியதில்லை

கொழும்பு மாளிகை வீடுகளில் மனமின்றி
வாழ் மானிடர் மத்தியில் ஓர் குடிசையை
கோபுரமாக்கிய மகான்கள் எம்
அம்மா – அப்பா

தம்பி வருவான் கூட்டிப்போவான் என
வாசல் பார்த்த இருந்த உனை
இடைநடுவில் இரக்கமிலா மரணம்
பின்வாசல் வழி கூட்டிப் போனதே!

இந்தி இருக்கிறான் இடைஞ்சல் இலை
என இருந்தனையோ!
இடியென மின்னலாய் ஏன் இன்று மறைந்தனையோ!

கலங்காமல் கடைசிவரை அப்பாவின் கரம் பிடித்தான்
கடைசியிலும் எனை விடான்
இராஜன் என இராஜகுமாரியாய் முழங்கினையே!
உன் முழக்கங்கள்..
இன்று மௌனமானதேன்..

வகையாக வாய்க்கு இதமாக வசந்தி தந்தாள்..
சுவையாக சூடு குறையாமல் சூப் தந்தாள் சுகந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வாய்க்கு வாய் சொன்னனியே...
திரும்பிப்போக நாட்களை தேடிய உனை
ஒரு நொடியில் இறப்பு இழுத்துக் கொண்டதே..

மூத்தவன் ரவி அவன்
முனைவனாய் முன்னின்று முகம்
கோணாமல் பார்ப்பான் - என
மூச்சுக்கு மூச்சு உரைத்தனையே
இன்று மட்டும் மூச்சுவிட மறந்தனையோ..

பாலன் வருவான் பாலன் வருவான்
என பலகாலம் பார்த்திருந்தனையே
பாலன் வந்தபோது மட்டும் ஏன்
வாய் மூடி போனனையோ...!

சுமைதாங்கி நான்
சுமையாக நான் இருக்கேன் என்றேன்
கடுகதியில் அடிவானில் விடிவெள்ளி ஆனாய்..

என் ஊனுக்கு உயிர்கொடுத்தாய் அம்மா
என் நாவுக்கு சுவையாக ஆக்கிப் போட்டாய் அம்மா...
என் எழுத்துக்கு தாய் மொழியாய் தமிழ் தந்தாய் அம்மா..
உதிரம் உறையும் வரை உனை நான் மறப்பேனா?

**லோகன்(தம்பி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருமகன் இரங்கல்**

அன்பு மாமி! கலங்கி நிற்கும் மருமகனின் ஏக்கம். நீங்கள் இலண்டனில் காலமான செய்தி எமக்கு பேரிடியாக அமைந்தது!

நீங்கள் சுகமில்லாமல் இருக்கிறீர்கள் என்றறிந்தும் சாதாரண சுகவீனம்தானே சுகமாகி மீண்டும் எங்களுடன் இணைந்து கொள்வீர்கள் என்று எண்ணி மகிழ்ந்திருந்தோமே!

அனைவரையும் ஏமாற்றிவிட்டு இறைவனடி சேர்ந்திருந்தீர்களோ! இலங்கையில் மாமாவின் பிரிவின் பின்னர் என்னுடனும் தங்கள் மகளான எனது வசந்தியிடனும் அனைத்து இடங்களை
யும் சுற்றிப் பார்த்தமை, கோயில்களுக்குச் சென்றமை, வீட்டிற்கு வரும் அனைத்து உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் உபசரிக்கும் தங்கள் பண்பு, என்னைத் தங்கள் மருமகனாகப் பார்க்காமல் மகனாகக் கவனித்தமை அனைத்தையும் எண்ணிப்பார்க்கிறேன்! இதயம் கனக்கியது! கண்கள் கலங்குகின்றன! மனம் நோகிறது.

மாமி ஒன்று மட்டும் நிச்சயம். சத்தியம். நீங்கள் மறைந்தும் மறையாதவர். என்றென்றும் நீங்கள் எம்முடன் எமது எண்ணங்களில், எமது இதயங்களில் காலமெல்லாம் வாழ்வீர்கள்!

கண்ணீருடன்
உங்கள் மருமகன்
**ராமா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின் தவிப்பு

மாமி மாமி என் இனியாரை அழைப்போம்.நீங்கள் மறந்தும் யாருக்கும் தீங்கு செய்ய மாட்டீர்கள். மருமக்கள் எங்களையும் உங்கள் பிள்ளைகள் போல் எண்ண உள்ளன்போடு நடத்தினீர்கள். எப்பேர்ப்பட்ட பிரச்சனைகளையும் துச்சமாக எண்ணி எளிதாய் தீர்வு காண்பீர்கள். நீங்கா நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஜெயராணி, தமயந்தி, அனா, புஸ்பராணி, சர்மிளா**

## Grandchild Thayan's Message

From when I was born Appama has taken care of me, especially from the ages of 1 – 16. When both of my parents were working full time, it was my grandparents who took care of me. Appapa would pick me up from school and walk me home, and Appama would be waiting at home with welcoming arms, preparing dinner which we would later eat together while watching television. She later lived on and off with us for twelve years.

Although Appama was a simple lady, she left a very impressionate mark on my life. She was someone who I knew I could always turn to when I needed a loving shoulder or someone to listen to my issues. She's an incredibly caring person, and cared for everyone she knew and met. But more than anything she cared for her grandchildren. When I was



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

younger, and my mum would tell me off for doing badly at school, it would be Appama who would comfort me, and give me a hug.

One of the ways she used to show her love was by cooking, and I look back with fond memories at the vast amount of family dinners she prepared. Ranging from kool parties to simple rice and curry dinners. She was always concerned about my health, and if I was eating healthily, even in her last few days, when she was struggling to eat food herself, the first thing she would usually ask me was 'what did you eat today?'. Of course prior to this if I had not eaten, she would instantly offer to make food for me. I will never forget the paal appams she cooked for me!

During her final days I was able to speak to Appama for a brief period one evening. Whilst speaking to her she explained 'I am very happy that everyone in the family is happy, and living peacefully with one another. I love all of my family, and love all of my grandchildren equally'.

This sentence will always stick with me, as it personifies Appama so well. Although she was sick, all she could think about was her family. Despite not being able to think clearly, there was not a doubt in her mind what her family meant to her.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I love you Appama, and I will never forget the love and compassion you showed to me.

## Grandchild Karthik's Message

Appamma was a kind, generous, beautiful and loving person, and always had a positive attitude towards life. I remember the time when we went to the Monterey Bay Aquarium with her and also the time we spent together in North Carolina. Even though she is gone, she will always live in my heart.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Grandchild Damian's Message

Hello, for those of you who do not know me, I'm Damian; Grandma's third grandchild. My relationship with my grandmother was always limited by the lack of verbal communication, as she did not speak the best English, and I can't speak Tamil, however that did not diminish our relationship in any way because as she saying goes 'actions speak louder than words'. And my grandmother's actions told me all I needed to know about her love for me and my cousins alike. There was never a birthday that has passed without us receiving birthday wishes and that £50 that she has always gifted us with. There was never a day gone by when she lived with us where she wouldn't ask us if we has eaten, or offer us food. She always wanted us to be strong and healthy. I could see the pride in her eyes and her smile every time I saw her after a long while as she watched me and my cousins grow, some into smart young adults, other well on their way. Lately I've learnt to deal with the sadness through the realisation that although she has passed now, she is no longer suffering and at least I got to spend 20 years of my life with her and for that I am very grateful and I will never forget her. As our language barrier was ever present, the thing that amplified her emotions the most was her smile,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

she smiled until the very end. I remember the day before she passed away when I went to the hospital to pay her a visit with Thayan, although she has a hard time breathing, moving, and doing anything for herself, although she could not do the basics such as wash herself or tie her own hair back, she still collected the energy to look around the room and look me in the yes and smile mildly with as I said goodbye for the last time.

Thank you all very much for attending and paying your respects to my grandmother, god bless.

## Grandchild Anushan's Message

I don't know how many people get the privilege of experiencing the tender and pure love of a grandmother who is the epitome of kindness. The path that Appamma and me shared was filled full of happiness and love. One of my earliest and treasured memories of Appamma is her patiently waiting for me to sit down so that she can feed me my favourite rice and chicken curry. If there was one thing I greatly missed as I grew up was her gently feeding me.

She rarely expressed her wishes to anyone but when she told me that she wanted me to complete my diploma in Mirudangam. I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

was so moved by the interest she showed in my success and hence that motivation was key in pushing me on to complete my long due diploma.

I am hugely indebted to Appamma for sculpting the person I am today. Towards her later days I would always notice her observing my growth from a distance and one thing she would always instill into me was her wish of me speaking Tamil within our household. I wish that I could recite these few words in Tamil but I wouldn't be proficient enough.

Something that never ceased to amaze me from my childhood is her patience. It is that patience that I feel every one of her grandchildren should follow and I strongly believe will follow. While we all struggle to swallow the fact that Appamma is not with us today I think we can all agree that she lived a fulfilling life and her legacy will continue to live through us grandchildren and many more generations to come.

Thanks.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Grandchild Aakash's Message

Thank you all for coming to help us celebrate grandma's life and share our grief at her passing.

My name is Aakash, the 7th grandchild. It is a great honour for me to talk about grandma and my memories of her. It is difficult to put into words how much grandma meant to me. She was an incredible human being. Grandma was generous and kind woman,

When I was little, I spent a lot of time with Grandma and knowing her from such a young age I built such a strong bond, that will still live within me. The countless golden days I have experienced with grandma will never die.

When I was very young, grandma used to come and read stories to me every day. The stories where pleasant and where even better as she was reading it to me, and how ever sentence comes to a full stop and how every charming story comes to a finish so did grandma and so has my speech.

Thank you every one!

**எங்கள் அன்பு அம்மம்மாவுக்கு**

காலமெல்லாம் கலங்கரை விளக்காய்
ஒளி தந்தீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்க வைத்துவிட்டு எங்கு சென்றீர்கள்

எங்கள் ஒவ்வொரு பிறந்த
நாளின் போதும் ஆவலோடு
உங்கள் வரவை எதிர்பார்த்திருப்போம்

நீங்கள் எங்களுக்குப் பிடித்தமான
பொருட்களுடன் வருவீர்கள்
எங்கள் சந்தோசத்திற்கு அளவேயில்லை

இனி எங்கள் பிறந்தநாள் வரும்
ஆனால் அம்மம்மா உங்கள் வரவுக்காக
எங்களுடன் எங்கள் வாசலும் காத்திருக்கும்..

உங்கள் அன்பான வார்த்தைகள்
எங்களை என்றென்றும் நல்வழியில்
நடத்திச் செல்லும்

அம்மம்மா!
நீங்கள் எந்நாளும் எங்கள்
இதயத்தில் வாழ்வீர்கள்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**கேசவ், கிரிகேஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Grandchild Risigan's Message

My name is Risigan Logendran and I am one of Appamma's many grandsons. I never had the pleasure of her living with me in the U.S., but she did visit several times for a few months and we had great experiences together. In my memory I can never forget how patient and happy she always seemed. I cannot think of a time where I saw her upset at anyone and she was always smiling. During the times she was with us, Appamma always made sure to know what was happening in my sister and my lives. Everyday when we get back from school she would always be sure to ask what happened that day no matter how mundane, she always seemed interested. Even when she was not with us, Appamma would call and check on my sister and I at every important date and made sure she still knew what was going on with our studies and lives.

Another thing I will always remember Appamma for was her insistence on preserving our culture. Once when Appamma was here we all visited the Murugan Temple in Washington, DC. At the temple I was a little hesitant to take the kaavadi since most of the people taking it were older than I was. However, I noticed her intently watching me and her supportive smile convinced me to do it. I will never forget the joy and pride that



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

she had watching me do this. While she is no longer with us, I know I will always remember how patient, warm and attentive she was.

## Grandchild Rasheca's Message

My name is Rasheca Logendran and I am the granddaughter. One thing that I think we all will remember about Appamma was her extremely caring and thoughtful nature. Although Appamma didn't live with us in the U.S., she always made sure to catch up for the missed time whenever we spoke or whenever she would visit over summers. Every time we called her she would always make sure that we updated her about lives and when she was with us in the U.S., I always remember coming home from school and being greeted by her veer smiling face with the same question each day, "How was school?" Even when we would reply back with the most uneventful stories about our day, Appamma always made sure to wholeheartedly listen to us.

Appamma's caring nature could also be seen with her excitement to see the successes of grandchildren. I still remember when Appamma was at our house during the busy weeks of my brother and my Arangetram training. Oftentimes



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

when I would get frustrated with the many hours of practice, and my answers to her questions about my day were filled with grumbled annoyance, her excitement about our upcoming Arangetram and reminder that everything would be okay would remind me that what I was doing was actually worth it.

Although Appamma is no longer with us I know that I will never forget her constant bright and glowing smile and I will always try to emulate her thoughtful and caring nature.

**பூமகள் பூபதி அம்மா**

முத்துவேலுப்பிள்ளை கனகம்மாவின் தவப்புதல்வி
தாயகத்தில் தாவடியில் பூத்த பூமகளாம் பூபதியம்மாவே!

கருணையுள்ளம் கொண்ட கண்ணுத்துரையை
தன் துணையாய் கரம்பிடித்த தவப்புதல்வியே!

குடும்பம் எனும் கோவிலிலே
குத்துவிளக்காய் பிரகாசித்த குலவிளக்கே!

ஏற்றம் தரும் ஏழு வைரங்களைப் பெற்றெடுத்து
அறிவுச்சுடரை ஏற்றிவைத்த அகல்விளக்கே!

அன்பும், பாசமும் விழிகளில் ததும்ப
நேசமும் சினேகமும் இருகரங்களாய் விளங்க

புன்னகையோடு தன்னகத்தே வருபவரை
உள்ளன்போடு அரவணைத்த அன்புத்தாயே!

உந்தன் பேச்சினிலே பாசவெள்ளம் பெருக்கெடுக்கும்
நிந்தன் செயலினிலே தனித்துவமான திறனிருக்கும்

நெஞ்சத்திலே தளராத உறுதியிருக்கும்
கூடவே நேர்மை தவறாத வாக்கிருக்கும்

காமதேனுவாய் வாழ்ந்த தாயவள் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்களில் உத்தமமாய் நிறைந்த தாயே!

உறவுகளின் மகத்துவம் உணர்ந்த தாயே
அனைவரையும் தன் சேயாய் ஆதரித்தாயே!

இளையவரையும் தட்டிக்கொடுத்த உத்தமி நீயே
புதுமைப் பெண்ணாய் பூமியில் வாழ்ந்த தாயே!

நீர்க்குமிழி போன்ற உடல்தான் மாயமாய் போனதம்மா..
உங்கள் ஆத்ம நினைவுகள் எமக்குள் நிறைவாய் நிறைந்திருக்கிறதம்மா..

எம் உள்ளம் எனும் கோவிலிலே
அன்றும், இன்றும், என்றும் கலந்திருப்பவரே

உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவரை ஆராதனை செய்து
கண்ணீரால் கவிமாலை சூடுகின்றோம்!!!

உங்கள் அன்பின்
**நா.இ.குமாரசுவாமி குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிந்த சுவடுகளின் சிதறிய முத்துக்கள்

(1)

யாழ்ப்பாணத்தில் சிறுப்பிட்டி இருப்பும் மிக்கதாவடி என்னும் ஊரில் எனது தந்தையார் முத்துவேலுப்பிள்ளை தாயார் கனகம்மா இவர்களின் [illegible] யாக 25-11-1946 இல் நான் பிறந்தேன் என்னுடன் கூடப்பிறந்த உறவுகள் 2 அக்கா 2 அண்ணா 1 தம்பி. எங்கள் தந்தையார் பெரும் தொழில் அதிபராகவும் செல்வந்தராகவும் இருந்தார். வீட்டில் [illegible] 15 ஆட்கள் வரை வந்து தொழில் செய்வார்கள். எமது தகப்பனார், [illegible]

[illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2)

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் என் பாட்டுகளைக் கேட்டு மகிழ்வார்கள். இப்படியே என் பள்ளிக்கூட வாழ்க்கை எல்லோரின் அன்பைப் பெற்று சந்தோஷமாக போய்க் கொண்டிருந்தது. இந்நாட்களில் கல்லூரிக்குக் கூட்டிப்போய் வந்தவர் தன் கார் தொழிலை விட்டு தனது சகோதரருடன் கடை நடத்துவதற்கு மலைநாடு சென்று விட்டார். அத்துடன் எனது படிப்பும் நின்று விட்டது. இந்நாட்களில் அக்காமாரின் கலியாணங்களும் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது.

எனது படிப்பு இடை நிறுத்திய படியால் சங்கீதம் படிக்க வீட்டில் ஒரு மாஸ்ரரை ஒழுங்குபடுத்தி கொஞ்சகாலம் படித்துக் கொண்டிருந்தேன். போதாக்காலம் எனக்கு சுகயீனம் வந்து அதையும் இடைநிறுத்த வேண்டி வந்திட்டுது. காலமும் போய்க்கொண்டிருந்தது. பெரியக்காவின் அத்தானும் எனது கல்யாணப் பேச்சில் ஈடுபட தொடங்கிவிட்டார். எனது படிப்பை மேற்கொண்டு தொடர முடியவில்லையே என்று எனக்குள்ளே கவலைப்படுவேன்.

எனது கலியாணமும் நிச்சயமாகிவிட்டது. அத்தானின் தம்பியாருக்கு ஒழுங்கு பண்ணியிருக்கும் மணமகளின் தம்பியாரைத்தான் எனக்கு ஒழுங்கு பண்ணியிருந்தார். இவரின் அண்ணா பழனித்துரைமாஸ்ரர் அத்தானின் நெருங்கிய நண்பர். அவருக்கு என்னை நன்றாகத் தெரியும். அத்தானை சந்திக்க வரும்போது என்னைப் பார்த்திருக்கிறார். அவர்கள் அப்பாவும் பிஸ்னஸ் அலுவலாக எனது தகப்பனாரைச் சந்திக்க வரும்போது என்னைப் பார்த்திருக்கிறார். ஆனபடியால் எல்லோர் சம்மதத்துடன் அவர் அக்காவின் கல்யாணத்திற்கு முன் எங்கள் கல்யாண எழுத்தை முடிக்க வேண்டுமென்று 1950 ஆண்டு நல்ல சிறப்பாக நடைபெற்றது. அன்றுதான் நாங்கள் ஒருவரை ஒருவர் முதன் முறையாக சந்தித்ததும் பார்த்ததும். அவர் றெயில்வேயில் சேர்ந்து 2 வருடமாகிறது. அவரின் அக்கா கல்யாணம் முடிந்து ஒரு வருடத்தின் பின்தான் எங்கள் கல்யாணம் நடக்குமென்று சொன்னார்கள். இந்த இடைவெளி நாட்களிலும் பெரியக்காவும் எங்கள் வீட்டுக்குப்புறமான காணியில் வீடுகட்டிக் குடியேறிவிட்டார்கள். எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வீட்டில் இருக்கும் போதே பபா, ராணி, ஆனந்தன் என மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். என்னுடன் மிகவும் அன்பாக இருப்பார்கள். இரண்டாவது அக்காவும் முன்பே வீடு கட்டிக் குடியேறி விட்டார்கள்.

எங்கள் கல்யாணமும் 52ம் ஆண்டு வைகாசி மாதம் வெகு சிறப்பாக நடைபெற்றது.அப்போ அவர் இரத்மலானை ஸ்ரேசனில் வேலை செய்து கொண்டிருந்தார். அங்கு ஒரு வீடு வாடகைக்கு ஒழுங்கு செய்து 2 மாதத்தின் பின் என்னைக் கூட்டிக்கொண்டு போக வந்தார். ஒரு சிறு பெட்டியில் முக்கியமாகத் தேவைப்படும் சாமான்களை எடுத்துக்கொண்டு துணைக்கு அவரின் அப்பாவையும் கூட்டிக்கொண்டு எங்கள் வாழ்க்கைப் பயணத்தை தொடங்க ரெயின் ஏறினோம். அதே ரெயினில் அத்தானும் கொழும்பில் சாமான்கள் வாங்குவதற்காக வந்திருந்தார். அவர் கோட்டை ஸ்ரேசனில் இறங்கிவிட்டார். நாங்கள் மற்றரெயின் எடுத்து இரத்மலானையில் இறங்கினோம். அங்கு சிங்களப் பெண் வந்து சமையலுக்கு உதவி செய்வா. பக்கத்தில் நாயர் குடும்பம் கீரைத் தோட்டம் வைத்திருக்கிறார்கள். மனைவிக்குச் சிங்களம் தமிழ் தெரியும். அவர்களுடன்தான் நான் சிங்களம் கதைக்கப் பழகினேன். அந்த நாளையில் தமிழர் சிங்களவர் என்ற வேற்றுமை இல்லை. அன்பாகப் பழகுவார்கள். வெசாக் பண்டிகை நாட்களில் அவர்கள் தங்களுடன் என்னையும் கூட்டிப்போய் எல்லாப் பந்தல்களையும் பார்த்துக்கொண்டு என்னை வீட்டுக்குக் கூட்டி வந்து விடுவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து என்னுடைய வாழ்க்கை கொழும்பு வாழ்க்கையாக மாறிவிட்டது. அப்போ நடந்த சில சம்பவங்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. அதில் ஒன்று நாங்கள் முதன் முதலாக கொழும்பு வந்தபின் அக்காவுக்கு கடிதம் எழுதி போஸ்ற் பண்ண அவரிடம் கொடுத்திருந்தேன். அதற்கு பதில் கடிதம் அக்காவிடம் இருந்து வந்தது. அத்தான் என்று எழுதிவிட்டு ஏன் அதை வெட்டினாய். எழுதாமலே விட்டிருக்கலாம். அதனால் இங்கு பெரும் பிரச்சனையாக இருக்கு என்று அக்கா எழுதியிருந்தா. இது பற்றி அவரிடம் கேட்டபோது எங்களுடன் வந்தவர் முதன்முதலாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச விருட்சப




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இங்கு எப்படி இருக்கிறமென்று பார்க்க வராமல் போனவருக்கு ஏன் கடிதம் எழுதுவான் என்று வெட்டினேன் என்று சொன்னார். அத்தான் இது பற்றி பழனித்துரை மாஸ்ரர் (இவரின் அண்ணா)ருக்கும் சொல்லி என் வீட்டுப்படி ஏறினால் அவரின் கால் அடித்து முறிப்பேன் என்று ஏசியதாக அவரின் அண்ணா சொன்னார். நாங்கள் கொழும்பு வந்தபின் சுருட்டுத் தொழிலும் குறையத் தொடங்கிவிட்டது. காரணம் அங்கு வேறு பலரும் இத்தொழில் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

நாங்கள் விடுமுறையில் அம்மா வீட்டுக்குப் போனபொழுது அக்காவின் பிள்ளைகள் கேற்றுக்கு வெளியில் நின்றார்கள். உள்ளுக்கு வரும்படி கேட்டபோது உள்ளே போய் உங்களைப் பார்க்க வேண்டாம் என்று அப்பா சொன்னவர் என்றார்கள். இப்படி இருக்கும் நாட்களில் அக்கா வீட்டில் இருந்த பொன்னையா அப்பா என்பவர் காலையில் பூமரங்களுக்கு தண்ணீர் இறைத்து விட்டு முகம் கழுவும் போது அப்படியே விழுந்து இறந்திட்டார். அன்று செத்த வீடும் நடக்க இருக்கு. இந்த நேரத்தில் இவரையும் ஒற்றுமையாக்க வேணுமென்ற நோக்கத்தில் எனது சிறிய தாயாரின் ஐயா செத்த வீட்டுக்கு வந்திருந்த அத்தானின் சொந்தக்காரரும் தனக்கு பழக்கமான வல்லிபுரம் என்பவரிடம் இவ்விஷயத்தை சொல்லி வீட்டுக்குக் கூட்டி வந்தார். அவர் வந்து கதையை தொடங்கினார். எப்பிடியடா தம்பி இருக்கிறாய் என்று ஆரம்பித்து இது விஷயமாக கதைக்கும் போது இவர் எழும்பி என்னை மன்னிக்கவேணும் எனக்கு பெரியவர்கள் என் அப்பா, அம்மா, மாமா, மாமி இவர்கள் எது சொன்னாலும் கேட்கத்தயார் மற்றவர்கள் இதில் தலையிடுவதை நான் விரும்பவில்லை என நேரே சொல்லி விட்டார். அதற்கு அவர் சொன்னார். எட தம்பி நீதான் உண்மையில் பெரிய மனிதன். என் கண்களையும் திறந்துவிட்டாய். இப்படியான விஷயங்களில் இனி நான் தலையிடமாட்டேன் என்று சொல்லி போய் விட்டார். இதன்பின் எனது அப்பா, அம்மா சொல்லி இவரும் செத்த வீட்டுக்குப் போய் வந்தார். அத்துடன் எல்லோர் கோபங்களும் முடிந்திட்டுது இதை ஏன் என்றால் இவர் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளையிலிருந்தே தன் குடும்ப பெரியவர்களுக்கு தனி இடம் கொடுத்து கௌரவித்து வந்தவர்.

எங்கள் மூத்தமகன் ரவி வைகாசி 55ம் ஆண்டு பிறந்தான் சிறு பிள்ளையாக இருக்கும்போது நல்ல அழகாகவும், கொழுகொழுவென்றும் இருப்பான். அக்காவின் மகன் பிரமானந்தன் அவரும் சின்னப்பிள்ளை தான். என்னைக் கேட்பார். இவருக்கு எலும்புகள் இல்லையோ என்று குழந்தையில் அவ்வளவு மொத்தமாக இருந்தார். இந்த நாட்களில் இரத்மலானை ஸ்ரேஷனுக்குக் கிட்ட உள்ள ஒரு தென்னந்தோட்டக் காணியை நாலு பேர் சேர்ந்து வாங்கி நடுவில் வேலி போட்டு இருபக்கமும் 2-2 பேராக பிரித்து எடுத்து எங்கள் விருப்பப்படியே பிளான் போட்டு அழகான வீடு கட்டினோம். குடிபூரலும் நல்ல முறைப்படி செய்து ரவி பவனம் என்று பெயர் போட்டு குடிபூரல் திகதியும் வீட்டுப் படியில் போட்டிருக்கும் எனது தம்பி இராசு இலக்ரிக்கல் போமனாக வேலை செய்தவர். அவர்தான் வீட்டுக்கு மின்சார வயரிங் வேலை செய்தவர். எங்களுடன் தான் இருந்தார்.

அந்நாட்களில் தான் இரத்மலானை இந்துக்கல்லூரி கட்டினது.

இந்நாட்களில் நிறையத் தமிழ் ஆட்கள் இரத்மலானையில் குடியிருந்தார்கள். கல்லூரி கட்டுவதற்கு நிதி சேர்ப்பதும் மற்றும் பல உதவிகளும் இவர்தான் முன்னின்று செய்தார். ரவி பிறந்திருந்தபோது நல்ல குணமான ஒரு வேலைக்காரப் பையன் எங்களுடன் இருந்தவன். அவன் பெயர் அப்புகாமி, நாங்கள் வைத்த பெயர் ஆறுமுகம். அவன் எல்லோருடனும் அன்பாக பழகுவான். நல்ல வேலையும் செய்வான். நாங்கள் வரும்போது அவனையும் எங்களுடன் கூட்டிவந்தோம். பின்னர் அம்மா தான் தனிய இருப்பது கஸ்ரமாக இருக்கு என்று அவனை தனக்கு உதவிக்கு அனுப்பும்படி கேட்டு அவனை அங்கு அனுப்பியிருந்தோம். எனது பெரியண்ணரின் மச்சாளுக்கு மூத்த பிள்ளை நிறைமாதத்தில் பிறந்து இறந்து விட்டுது. அடுத்த பிள்ளையும் சரிவராமல் போக அவர்கள் கொழும்பில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகப்பேறு வைத்தியர் சின்னத்தம்பி என்பவரிடம் காட்டியபோது இப்பிள்ளையை ஒரு குறையுமில்லாமல் நான் காப்பாற்றித் தருகிறேன். அதுவரை கொழும்பில் இருந்து வைத்தியம் செய்யவேணும். எங்கள் வீடு வசதியாக இருந்தபடியால் எங்களுடன் இருந்தார்கள்.

எனக்கும் இரண்டாவது மகன் பிறக்க இருந்தபடியால் நான் பங்குனி மாதம் யாழ்ப்பாணம் போய் பங்குனி 25ம் திகதி பாலன் பிறந்தார். பின்னர் ஒரு மாதம் கழித்து அம்மா கொழும்புக்கு போட்டா. அக்காமார் உதவியும் வேலைக்காரரின் உதவியுடன் நான் அங்கிருந்தேன். கொழும்பில் யூன் 5ம் திகதி அண்ணா ஆட்களுக்கு ஒரு மகள் நல்ல சுகமே பிறந்திருப்பதாக அறிந்ததும் எங்களுக்கு மிகுந்த சந்தோஷம். அவர்கள் ஒரு மாதம் கழித்து யாழ்ப்பாணம் வந்ததும் நானும் பிள்ளைகளும் கொழும்பு புறப்பட்டோம்.

58ம் ஆண்டு ஹட்டன் ஸ்ரேஷனுக்கு ரான்ஷ்வர் கிடைத்ததும் எங்கள் வீட்டை ஒரு இஞ்சினியர் குடும்பத்திற்கு வாடகைக்குக் கொடுத்திட்டு ஹட்டனிற்குப் போட்டோம். அங்கிருக்கும் போது நுவரேலியா போன்ற பல இடங்கள் போய் வந்தோம். அந்த வருடம் இவரின் தம்பி பொன்னுத்துரைக்கு கல்யாணம்
நிச்சயமாகி இருந்தது.ஹட்டன் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எங்களுடன் நல்ல பழக்கம் அவர் சொன்னார் தன்னுடைய காரில் தான் மட்டும் தான் யாழ்ப்பாணம் போகிறேன். தன்னுடன் எங்களையும் வரச்சொல்லி. நாங்களும் அவருடன் போனோம். அன்று கொழும்பில் இனக்கலவரம் தொடங்கியிருந்தது. எங்களுக்கு தெரியாது. நாங்கள் பிரச்சனை இல்லாமல் வீடு வந்திட்டோம். பின்பு தான் அறிந்தோம். கொழும்பிலிருந்து வந்த கார்களை வழிமறித்து அடித்ததாகவும் கொழும்பில் பெரும் கலவரம் நடப்பதாகவும் எங்கள் வீட்டில் இருந்த தமிழ் ஆட்கள் வீட்டுத் திறப்பை எங்களுக்கு பழக்கமான சிங்கள ஆளிடம் கொடுத்துவிட்டு பாதுகாப்பான இடம் தேடி போய் விட்டார்கள். பெரும் தொகையான காடையர் கத்தி பொல்லுடன் எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப் பக்கத்தில் இருக்கும் தமிழ் ஆட்கள் வீட்டுக்கு போய் குழப்பம் செய்தபோது அவர்கள் துவக்கெடுத்து சூட் பண்ணியதும் திரும்ப பெருந்தொகை காடையர் வந்து கல் எறிந்ததும் பெற்றோல் குண்டு வீசியும் வீட்டை நாசப்படுத்தியதும் வீட்டுக்காரர் பின் பக்கமாக ஓடி தப்பிவிட்டார்கள். பின்னர் எங்கள் வீட்டை விசாரித்தபோது திறப்பு வாங்கிய சிங்களஆள் பெயர் அத்தப்பத்து அவர் தன்னுடைய வீடு என்று சொன்னதும் கூட்டம் கலைந்துபோட்டுது. கடவுள் தான் அந்தநேரம் எங்களுக்கு உ்தவி செய்திருக்கிறார். அதன் பின்னர் அங்கு குடியிருந்த தமிழ் ஆட்கள் வேறு இடம் மாறத் தொடங்கிவிட்டார்கள். எங்கள் வீட்டையும் ஒரு சிங்கள ஆளுக்கு வாடகைக்கு கொடுத்தோம். அவர்களும் வாடகைப்பணம் தராமல் இழுத்தடித்தார்கள். அவ்வீட்டை விலைக்கு தரும்படி அவர்களுக்கே கொடுத்திட்டோம்.

நாங்கள் ஹட்டனில் இருந்து அம்மா வீட்டுக்கு வந்தபின் அங்கேயே இருந்துவிட்டோம். அங்கிருந்து கெக்கிராவைக்கு ரான்ஸ்சர் கிடைத்தது. அவர் ஹட்டனில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது ஒரு சிறிய பியட் கார் வாங்கி றைவரின் உதவியுடன் வரும் வழியில் முறிகண்டி கழிந்த பின் கார் பள்ளத்தில் விழுந்துவிட்டது. ஆட்களுக்கு ஒரு காயமும் இல்லை. காரை கராச்சில் திருந்த கொடுத்திட்டு வந்திட்டார்கள். அதன்பின் கெக்கிராவை ஸ்ரேசனுக்கு வேலையாகப் போய்விட்டார். 58 நவம்பரில் வசந்தியும் நல்ல சுகமே பிறந்தா. அந்த நாட்களில் தம்பி இராசுவும் மேற்கொண்டு படிக்க லண்டன் புறப்பட்டார். அதற்கான ஒழுங்குகள் எல்லாம் செய்து அவர் தான் வழி அனுப்பி வைத்தார். வசந்தி பிறந்து ஆறு மாதமளவில் எனக்கு கடும் சுகயீனம் வந்தது என்று சொன்னார்கள். எழும்பி நடக்க முடியாமல் ஒரு மாதமளவில் படுக்கையில் இருந்தேன். ரவி சின்னப்பிள்ளை. அவர் என்னுடைய தோளைப் பிடித்து எழும்புங்கோ என்று கேட்பார். ஒரு தமிழ் வைத்தியர் தான் தினமும் வந்து பார்ப்பார். பலதரப்பட்ட மரப்பட்டைகளை அவித்து காய்ச்சி அதை கால்களுக்கு பூசும்படி சொல்வார். அந்த வேலைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகாரப்பையன் இருந்தபடியால் உதவியாக இருந்தது. அம்மாவின் சகோதரர்கள் (சிறிய தாய்மார்) தினமும் வந்து பார்த்துப் போவார்கள். நோய் குறைவதாக இல்லை. எல்லோரும் என் கடைசி மூச்சைத்தான் எதிர்பார்த்தார்கள். அவருக்கும் அண்ணாமாருக்கும் எனது நிலைமையை அறிவித்ததும் அவர்கள் வந்து பார்த்து செய்வதறியாமல் நின்றார்கள். அவர் உடனே போய் வெற்றிவேல் டொக்டரைக் கூட்டி வந்து காட்டியதும் அவர் உடனே ஊசி மருந்தேற்றிய பின் சொன்னார். நல்லவேளை கடைசி நேரத்தில் கூட்டி வந்தீர்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் வேர்க்கும். அதன்பின் உடம்பையும் அசைக்கக் கூடியதாய் இருக்கும் என்று. சொன்னபடியே நடந்தது. பின்னர் வேறு மருந்துகளும் தந்து போனார். அதன் பின் எழும்பக்கூடியதாய் வந்திட்டுது. பின் அவரிடம் மருந்தெடுத்து நல்ல சுகம் வந்த பின் நாங்கள் பிள்ளைகளுடன் கெக்கிராவை ஸ்ரேசனுக்கு போய் இருந்தோம். எங்களுக்கு உதவியாக மாமாவும் வந்திருந்தார். ரவியும் அங்கிருக்கும் ஸ்கூலில் படிக்க தொடங்கி விட்டார். எங்கள் காரும் திருத்தி எடுத்து வந்தபின் ரவியின் அப்பாதான் ஸ்கூலுக்கு கூட்டிப்போய் கூட்டி வருவார். அங்கிருக்கும் போது சீகிரிய, அஜந்தா ஓவியம் திருகோணமலையில் உள்ள பாடல்பெற்றகோயில், சுடுதண்ணீர் கிணறு இப்படி பல இடங்களும் பார்த்து வந்தோம். கெக்கிராவையில் இருக்கும் போது பால், முட்டை, இறைச்சி தாராளமாகக் கிடைக்கும். மாடு கன்று போட்டு 3வது கிழமையே தாய் மாட்டையும் கன்றையும் குத்தகையாக தருவார்கள். அதனை வீட்டில் நாங்கள் பராமரித்து பால் எடுப்போம். பால் எடுத்தபின் கன்றை வைத்துக் கொண்டு தாய்மாட்டை அவிழ்த்து விட்டால் அது வெளியில் போய் புல் மேய்ந்து வரும். பக்கத்தில் மில் இருக்கு. அவர்கள் தவிடு தருவார்கள். வைக்கோலும் தாராளமாக கிடைக்கும். மாட்டுக்கு நல்ல சாப்பாடு கொடுத்து பாலும் தாராளமாக எடுப்போம். பக்கத்தில் மரக்கறி தோட்டம் வைத்திருக்கினம். அவர்கள் காய்கறி தருவார்கள். பணம் எடுக்கமாட்டார்கள். இப்படி எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியும் இருக்கு. அந்த ஸ்ரேஷன் ஒரு வருடம் தான் கொடுப்பார்கள். பின்னர் கோட்டை ஸ்ரேசனுக்கு மாற்றம் கிடைத்தது. அங்கு வீட்டு வசதி இல்லாதபடியால் நானும் பிள்ளைகளும் யாழ்ப்பாணம் போயிருந்தோம். செப்ரம்பர் 60ம் ஆண்டு இராஜன், இந்தி பிறந்தார்கள். வேலு என்ற வேலைகாரப் பையனும் உதவிக்கு இருந்தான். வேலுவுடன் பக்கத்தில் இருக்கும் வீட்டுக்காரரும் அடிக்கடி கதைத்துக் கொள்வார்கள். இந்நாட்களில் முன்பு மலைநாட்டில் கடை நடத்துவதற்கென்று சென்ற சொந்தக்கார மாமா திரும்பவும் யாழ்ப்பாணம் வந்து டாக்சி ஓட்டுகிறார். இரவில் அம்மா வீட்டில் தான் காரை விடுவார். திடீரென ஒருநாள் காலையிலிருந்து வேலுவை காணவில்லை. இது பற்றி அந்த டாக்சி ஓடும் மாமாவிடம் சொன்னபோது தான் எப்படியும் பொடியனை கண்டு பிடிக்கிறேன். இவ்விசயத்தை அவருக்கு அறிவிக்கும்படி சொன்னார். அவரும் அடுத்தநாள் காலையில் இவரும் கொழும்பிலிருந்து வந்திட்டார். கார் ஓட்டுபவரும் உடுவில் என்ற இடத்தில் பொடியனைக் கண்டு பேசி எல்லா விஷயங்களையும் அறிந்து வந்திட்டார். பின்னர் அவரையும் கூட்டிக்கொண்டு உடுவிலுக்குப் போய் அந்த வீட்டுக்காரருக்கு நடந்த விசயங்களை சொல்லி பொடியனை கூட்டி வந்திட்டார்கள். பக்கத்து வீட்டு ஐயா தனக்கு சம்பளம் கூட வாங்கி தருவதாக சொல்லி கூட்டிப்போனார் என்று சொன்னான். அடுத்தநாள் அங்கு ஒரு வீடு குடிபூரல். அதற்கு வேலுவைக் கூட்டிப்போனவர் எங்கள் வீட்டுப்பக்கமாகத்தான். வேலுவை கூட்டிப் போனவர் சைக்கிளில் போவார் என்ற தகவல் கிடைத்ததும் வேலுவும் அவரும் கேற்றடியில் நிற்கும்போது அந்தாள் சைக்கிளில் வந்ததும் வழிமறித்து அந்தாளை சைக்கிளை விட்டு இறக்கி அவர் வேலுவிடம் கேட்டார். இவன்தானா என்னைக்கூட்டிப்போனவன் என்று. அவன் ஆம் ஐயா என்று சொன்னதும் உனக்கு ஏனடா இந்த எளிய குணம் என்று ஏசி அடிக்கப்போனதும் வேறு ஆட்கள் வந்து சமாதானப்படுத்தி விலக்கி விட்டார்கள். அக்கதை எங்கும் பரவத் தொடங்கி விட்டுது. அடுத்தநாள் எனக்கு பல் வலி இருந்தபடியால் டொக்டருக்கு காட்டுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கிடும்போது அவரின் அப்பாவும் வீட்டுக்கு வந்தார். அவரையும் கூட்டிக்கொண்டு றோட்டுக்கு திரும்பும் வழியில் சங்கரசிவம் என்பவர் (மாமன்) எங்கள் காரை மறித்து நேற்று உன்ரை கொக்குவில் குணத்தைக் காட்டினாய். இறங்கு பார்க்கிறேன் என்று கையில் வாள் ஏந்திய படி நின்றார். இவர் தான் கார் றைவ் பண்ணி வந்தவர். காருக்குள் இருந்த கார் ஸ்ராட்டர் கம்பியை கையில் எடுத்துக்கொண்டு இறங்கினார். அவரின் அப்பாவும் இறங்கி வந்து சங்கரசிவத்தின் வாள் ஏந்திய கையை பின்புறமாக இறுக்கிப் பிடித்துக்கொண்டார். அதே இடத்தில் வீடு கட்டிக் கொண்டிருந்த ஆட்கள் வந்து இருவரையும் விலக்கி விட்டார்கள். பின் நாங்கள் பொலிஸ்ஸ்ரேசனுக்கு போய் முறைப்பாடு கொடுத்து வந்தோம். இது என்றும் மறக்க முடியாத நிகழ்ச்சி. அடுத்த நாள் கொக்குவில் இந்துக்கல்லூரியில் கட்டிட திறப்பு விழா பின்னேரம் அவரும் காரை எடுத்துக் கொண்டு போட்டார். இரவு 7 மணி விழா முடிந்து வரும்போது காரை மறித்து அப்பாவுக்கு அடிக்க ஆட்கள் வைத்திருப்பதாகவும் வேறு வழியால் வீட்டுக்கு வந்தால் நல்லது என்று எங்களுக்கு தகவல் கிடைத்தது. இதை நாங்கள் பாடசாலையில் நிற்கும் அவருக்கு அறிவித்ததும் அவர் தனது சினேகிதப் பிள்ளைகளுடன் இரும்பு, பொல்லு என்று ஆயுதங்களுடன் 7.30 மணிபோல வந்து எங்கள் வீட்டுக்கு திரும்பும் வழியில் ஒரு கும்பல் காரை மறித்ததும் படார் என்று கார்க்கதவை திறந்து கொண்டு கையில் பொல்லுடன் ஆட்கள் இறங்கியதை கண்டவுடன் காரை மறித்தவர்கள் ஓடி ஒளிந்திட்டார்கள். இவை அனைத்தும் எங்கள் வீட்டிலிருந்து பார்க்கத் தெரியும். இதன் பிறகு பாடசாலையில் இருந்து அவரின் நண்பர்கள் அனைவரும் சைக்கிளில் வந்து விசாரித்து போனார்கள். இதன் பின் பொலிஸ் ஆட்களும் உள்ள பெரியவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து வழக்கை வாபஸ் பண்ணும்படி மன்றாட்டமாக கேட்டார்கள். அதற்கு இவர் சொன்னார். கோட்டில் வந்து மன்னிப்புக் கேட்டால் வழக்கை வாபஸ் பெற்று எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்து சந்தோஷமாக இருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நாங்கள் கொழும்பில் இருப்பதற்கு வீடு பார்த்தோம். அண்ணரும் எங்களுடன் சேர்ந்து இருக்க விரும்பி கொட்டாஞ்சேனை சந்தியில் ஒரு ஐயர் வீட்டை வாடகைக் எடுத்தோம். நல்ல வசதியான இடம் கோயில்களும் கிட்ட இருக்கு. சுகந்தியும் தை மாதம் பிறந்தா. எங்கள் வாழ்க்கையும் சந்தோஷமாகப் போய்க்கொண்டிருந்தது.

இந்நாட்களில் சின்னக்காவின் மூத்தமகன் யோகன் O/L படித்து முடித்திருந்தார். அவருக்கு கொழும்பில் ஏதாவது வேலை எடுத்து கொடுக்கும்படி அக்கா சொல்லி யோகனையும் எங்களுடன் கூட்டி வந்தோம் Bank of Ceylon டைரக்டர் D.C சுப்பிரமணியம் அப்பாவுக்கு நெருங்கிய சிநேகிதர். அவரின் உதவியுடன் இலங்கை வங்கியில் வேலை எடுத்து கொடுத்து எங்களுடன் யோகனும் இருந்தார். 67ம் ஆண்டு யூன் மாதம் கொழும்பு நேசிங்ஹோமில் லோகேந்திரன் பிறந்தான். அந்நேரம் சிங்கள பெண் வேலைக்கிருந்தா. தமிழ் பேசுவா. பிள்ளைகளின் வேலை, சமையல்வேலை எல்லாம் செய்வா. எனக்கு நல்ல உதவி.

இந்நாட்களில் எனது தம்பி இராசு லண்டனில் இருந்து Peugeot 404 அனுப்பியிருந்தார். அக்காரை அப்பா அம்மா வைத்து பாவிக்கும்படி சொல்லியிருந்தான். இவர்தான் அக்காரை கிளியர் பண்ணி எடுத்தபின் அக்காரில் எல்லோரும் யாழ்ப்பாணம் போனார்கள். (சின்னன்னா, பிள்ளைகளும் அக்காருக்கு, சம உரிமை கொண்டாட தொடங்கியதும்) கொழும்புக்கு வந்தவுடன் அண்ணர் அக்காரை 45 ஆயிரம் ரூபாவுக்கு விற்று உடனடியாக வெள்ளவத்தையில் ஒரு வீடு 52 ஆயிரத்திற்கு வாங்கி விட்டார். (இனி கார் பிரச்சனையும் தீர்ந்து விட்டுது.) அவ்வீட்டை திருத்தி அண்ணர் ஆட்கள் அங்கு போனபின் நாங்கள் இருந்த வீட்டுக்காரரும் தங்களுக்கு வீடு வேணுமென்று கேட்டதும் நாங்களும் பல வீடுகள் பார்த்தபின் கடைசியில் கல்பொத்தை வீதியில் வீடு எடுத்து அங்கிருந்தோம். பல ஆட்கள் எங்கள் வீட்டுக்கு வந்து தங்கிப் போனார்கள். 2-3 வருடத்தின் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வீட்டை விற்றுவிட்டு புறோக்கா் மூலமாக வேறு வீடு மட்டக்குளியாவில் வாங்கி அங்கு போனோம். பெரிய வீடு 5 றூம்ஸ் அத்துடன் அனெக்ஸ், கராச் என்பன அடங்கிய வீடு. அனெக்சை ஒரு சிறிய குடும்பத்திற்கு கொடுத்திருந்தோம். மற்றும் அக்காவின் மகன் யோகனும் எங்களுடன் இருந்தார்.

இங்ஸ்பெக்ரர் ஈஸ்வரபாதத்தின் மகன் றெஜி O/L படிப்பதற்காக வந்திருந்தார்.மற்றும் ஈஸ்வரன், இராஜகோபால் இவரின் அக்காவின் மகன் இவர்கள் தங்கியிருந்தார்கள். வீடு கூட்டித்துடைக்க பொலிஷ் பண்ண வயதான முத்து என்பவர் இருந்தார். இவர் தான் இராஜகோபாலுக்கு தீயணைக்கும் Officeல் வேலை எடுத்து கொடுத்தார். இவர்கள் தங்களுக்கு எக்ஸசைஸ் வேணுமென்று அரிசிமா இடிப்பற்கு கேட்பார்கள். இப்படி எல்லோரும் சந்தோஷமாக இருப்போம். எந்த நேரமும் வீடு நிறைய ஆட்களாய் இருப்பார்கள். எனது தகப்பனார் இறந்ததை அறிந்ததும் பிள்ளைகளுடன் நாங்கள் யாழ்ப்பாணம் போயிருந்தோம். அங்கு எல்லாக் கடமைகளும் முடிந்த பின் அண்ணர் குடும்பம் கொழும்பு திரும்பி விட்டார்கள். அம்மாவை தனிய விட்டு வர மனமில்லாமல் நாங்கள் நின்ற போது அம்மா சொன்னா ரவியை கொக்குவில் இந்துக் கல்லூயில் சேர்த்து படிக்கவிட்டால் தனக்குஉதவியாக இருக்குமென்று முன்பு ரவி சின்னப்பிள்ளையாக இருந்தபோது உதவிக்கு நின்ற ஆள் ஆறுமுகம் என்ற பொடியன்தான் அங்கு சமையல் வேலை செய்கிறபடியால் ரவியை அம்மாவின் விருப்பப்படி அங்கு விட்டு வந்தோம். ரவிக்கு உதவியாக அக்காவின் பிள்ளைகளும் வருவார்கள். ரவியும் அங்கு சந்தோஷமாக இருந்தான். சைக்கிளில் பாடசாலை போய் வருவார்.

கொழும்பில் ஈஸ்வரபாதம் குடும்பம் வந்தால் எங்கள் வீட்டில்தான் தங்குவார்கள். மூத்த மகன் பாவானி கூடுதலாக எங்கள் வீட்டில் நிற்பா. எனது அண்ணா வீட்டுக்கு வந்தால் ஆண்பிள்ளைகள் கூடுதலாக இருப்பதைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரனிடத்திலும் இராசகோபாலுவிடமும் சொல்வார். ஆடிவேல் நாட்களில் தன் வீட்டில் வந்து தங்கி கோயிலுக்கு போய் வரலாம் என்று சொல்வார். அவர் கேட்டபடி ஈஸ்வரன் அங்கு போய் 2 நான் தங்கினான். அங்கு தங்கி விட்டார். இராசகோபாலும் அவனைப் பின்பற்றி போட்டார். வசந்தி பெரிய பிள்ளையானதும் சிறப்பாக சாமத்திய சடங்கு செய்வோம். பாலனும் O/L படிப்பதற்கு கொக்குவில் இந்துக்கல்லூாயில் படிப்பதற்காக ரவியுடன் போய் சேர்ந்திட்டார். அங்கு இவரின் அண்ணா பழனித்துரை மாஸ்ரர் இருவரையும் கண்காணித்துக் கொள்வார். ரவி A/L பாலன் O/L எடுத்த பின் இருவரும் கொழும்புக்கு வந்திட்டார்கள். இதன் பின் காலமும் மாறத் தொடங்கிவிட்டுது. ஈஸ்வரபாதம் ஆட்களும் தெகிவளையில் வீடு வாங்கி குடும்பமாக வந்திட்டினம். எங்கள் அனெக்சில்இருந்தவர்கள் வீடு வாங்கி குடும்பமாக வந்திட்டினம். எங்கள் அனெக்சில் இருந்தவர்கள் வீடு வாங்கி போட்டார்கள். யோகனுக்கும் இடமாற்றம் கிடைத்து யாழ்ப்பாணம் போட்டார். இவரின் அக்கா மகன் கருணாகரனும் UK வந்திட்டார். பின்னர் நாங்களும் அந்த வீட்டை விற்றுவிட்டு இரத்மலானை வந்திருந்தோம். எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும் பெயர் சொல்லித்தான் கூப்பிருந்தோம். கடைசி மகன் லோகேந்திரனை பெயர் சொல்லி கூப்பிடாமல் தம்பி என்று அழைப்பார்கள். நாள் படி எல்லா பிள்ளைகளிடமும் சொல்லி அவர்கள் தம்பி அழைப்பார்கள். நாள் போக நாள்போக அனைவருக்கும் தம்பியாக விட்டார். பாலன் சென்பெனடிற் கல்லூரி, இராசன், இந்தி இரத்மலானை கல்லூரி, தம்பி பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, வசந்தி, சுகந்தி குட்செப்பட் கல்லூரியிலும் படித்தார்கள். பெரியப்பாவின் மகள் கலா கட்டுப்பெத்தை யூனிவசிற்றியில் படிப்பதற்கு எங்கள் வீட்டியிருந்து தான் போய் வருவா. இந்த நாட்களில் சின்னண்ணா மகன் சிவராசனும் வந்திருந்தான். நாங்கள் இருந்து வீட்டுக்கு மேல்வீட்டில் சிங்கள ஆட்கள் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் எங்கள் பிள்ளைகளின் வயசுள்ள 3 ஆண்பிள்ளைகள் இருந்தார்கள். எல்லோரும் சேர்ந்து கிறிக்கட் விளையாடி சந்தோஷமாக இருப்பார்கள். பாலன் அந்த வீட்டில் உள்ள கராச்சை படிக்கும் அறையாக மாற்றி சில பிள்ளைகளுக்கு டியூசன் கொடுத்து வந்தார். மற்றும் பிள்ளைகளுடன் சிவராசன்,ஈஸ்வரபாதத்தின் மகன் சிறீ, இராசன், இந்தி ஆகியோரும் படிப்பார்கள். மற்றும் பிள்ளைகள் 3 பேரும் சம்பளக் காசு கொடுத்ததும் அதில் தான் மட்டும் சந்தோஷப்படுவதிலும் பார்க்க தன் சகோதரங்களுக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க வேணுமென்ற நல்எண்ணத்துடன் ஒவ்வொருவருக்கும்Tசேட் வாங்கி கொடுத்து சந்தோஷப் படுத்தினார். அந்தக்காசில் இவ்வளவு தான் வாங்க முடியும்.

இந்தப்பிள்ளையின் சகோதர அன்பு மனப்பான்மையை எண்ணி மகிழ்ச்சியடைந்தேன். கட்டுப்பெத்தை யூனிவசிற்றி பிள்ளைகள் ஒரு நாடகம் எழுதி அதில் நடிப்பதற்கு 2 சின்னப்பிள்ளைகள் தேவை என்று கேட்டு சுகந்தி, தம்பி இருவரையும் தேர்ந்து எடுத்தார்கள். அத்துடன் பெரிய பிள்ளையும் தேவை என்றதும் அப்பாவுடன் வேலை செய்பவரின் மகள் ஆனந்தராணி அவ டான்ஸ்சும் பழகியிருக்கிறா. அவரை சேர்ந்து விட்டோம். யூனிவசிற்றி சீனியர் Boy பாலேந்திராதான் இந்நாடக தயாரிப்பாளர். கொழுப்பு சரஸ்வதி மண்டபத்தில் இந்நாடகம் அரங்கேறியது. நல்ல வரவேற்பு கிடைத்தது. தம்பிக்கு 8 வயது ஆகவில்லை. சுகந்தியும் சின்னப்பிள்ளை நன்றாக நடித்தார்கள். பின்னர் பெரதெனியா யூனிவசிற்றியிலும் நடந்தது. நாங்களும் பிள்ளைகளுடன் இங்கு போய் வந்தோம். அதன் பின் யாழ்பாணத்திலும் நடந்தது. அங்கு நாங்கள் போகவில்லை. பக்கத்து வீட்டு றிஷப்ஷன் ஒன்றுக்கு மியூசிக் குறூப்பு வந்தது. அந்த மேடைகள் தம்பியை ஏறி பாட்டுப்படிக்கும் படிசொன்னதும் அவன் உடனே "கொந்தன மாகன" என்ற சிங்களப் பாட்டை பாடினதும் அங்கிருந்தவர்கள் சந்தோசப்பட்டு கைதட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு மருதானை controllers குவாட்டஸ் கிடைத்ததும் நாங்கள் அங்கு போயிருந்தோம். இக்குவாட்டஸ் மருதானை ஸ்ரேசன் உள் பக்கமாக இருக்கு ஒரே பில்டிங்கில் 6 வீடு 3-3 வீடாக இருக்கும் 2 தமிழ் ஆட்கள் 4 சிங்கள ஆட்கள் கொன்றோல் ஒப்பிசில் வேலை செய்பவருக்குத்தான் இவ்வீடுகள். யாழ்தேவி ரெயினில் வருபவர்களுக்கு நல்ல வசதி இரவு எங்கள் வீட்டில் தங்கி மறுநாள் தங்கள் வேலையை பார்த்துக் கொண்டு போவார்கள். அந்த வீட்டில் இருக்கும் சிங்களப் பிள்ளைகளுக்கும் எங்களின் பிள்ளைகளின் வயதானபடியால் எல்லோரும் சேர்ந்து விளையாடுவார்கள். ரவியும் வீண்பொழுது போக்காமல் பக்கத்தில் இருக்கும் ஒரு கொம்பினிளில் வேலை செய்தார். இந்நாட்களில் சைனாயூனிவசிற்றாயில் படிப்பதற்கு ஸ்கொலஷிப் தேர்வு நடப்பதாக அறிந்து அப்பா பாலனின் பெயரையும் கொடுத்தார். பின்னர் பாலனின் பெயரும் வந்திருப்பதாக தெரிய வந்தது. இந்த நாட்களில் சின்னக்காவின் மகன் யோகனுக்கு கலியாணம் நடக்க இருக்கு. பாலனின் தகவல் ஏதும் வந்தாலும் ரவி எங்களுக்கு அறிவிப்பான் என்பதினால் ரவியை வீட்டில் விட்டு நாங்கள் அனைவரும் கலியாணத்திற்கு போயிருந்தோம். கலியாணவீடு முடிந்து 3 வது நாள் ரவியின் தந்தி வந்தது. பாலன் செலக்பண்ணப்பட்டதாகவும் இன்னும் 1 கிழமையில் சைனா போக ரெடியாகும் படி இச் சந்தோஷமான செய்தியை அறிந்து எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள். அடுத்தநாள் சுகந்தி பெரியபிள்ளையாகி விட்டா. சுகந்தியையும் கொழும்பு கூட்டிவர எண்ணியபோது அம்மா தடுத்துவிட்டா. தனது வீட்டில் இப்படி ஒரு நல்ல காரியம் நடந்தபடியால் தான் வைத்துப் பார்ப்பதாகவும் பாலனை அனுப்பிய பின் இங்கு வந்து எல்லா சடங்கையும் முடித்துக்கொண்டு கூட்டிப்போங்கோ என்றதும் சுகந்தி அங்கேயே பிரியாவிடை கொடுத்து அனுப்பினா. கொழும்பு வந்தபின் சைனா போவதற்கான எல்லா வேலைகளையும் அப்பா செய்து முடித்து பின் குவாட்டஸ்சில் இருக்கும் அனைவருக்கும் அண்ணர் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் நெருங்கிய நண்பர்களுக்கும் அனைவருக்கும் சொல்லி சிறிய பார்ட்டி வைத்து எல்லோர் ஆசீர்வாதத்துடன் அடுத்தநாள் பாலன் சைனா புறப்பட்டார். அந்த நாளையில் ஏயாபோட் உள்ளுக்குள் எவ்வளவுபேரும் போகலாம். குவாட்டஸ்சில் இருக்கும் பிள்ளைகள் என இரண்டு காரில் போயிருந்தோம். சைனா ஸ்கொலஷிப் 7 பேரை செலட் பண்ணியிருந்தார்கள். அதில் 5 பேர் சிங்களவர், 2 தமிழ். எம்பசியில் இருக்கும் ஒருவர் வந்து 7 பேரையும் கூப்பிட்டு அவர்களின் சேட்டிபிக்கற் எல்லாம் பார்த்த பின் உள்ளே கூட்டிப்போனார்கள். பாலனும் எங்கள் அனைவருக்கும் பிரியாவிடை கூறி விட்டு அவர்களுடன் உள்ளே போனபின் நாங்களும் சோகமாக வீடு திரும்பினோம். 78ம் ஆண்டு இராசனும் றெயில்வேயில் வேலைக்கு சேர்ந்திட்டான். அப்பாவின் Office சுக்கு மேல்தான் இராசனின் Office ம் இருந்ததது. சேனாதிப் பெரியப்பாவின் மகன் கணேஸ்வரனின் தம்பிமார், இன்னுமொரு சகோதரம் ஆகியோர் ஜெர்மனி போவதற்காக எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்களுடன் ரவியும் போக ஆயத்தமானார். நாங்கள் ரவியிடம் சொல்லியிருந்தோம் அவர்களுடன் ஜெர்மனியில் நிற்காமல் எப்படியும் லண்டனுக்கு போய் படிக்க முயற்சி பண்ணும்படி. இந் நாட்களில் பாலனை அனுப்பிய பின் யாழ்ப்பாணம் போய் சுகந்தியின் சடங்கினையும் நல்ல சிறப்பாக செய்து கூட்டி வந்தோம். ரவியும் யாழ்ப்பாணம் வந்து சுகந்தியின் சாமத்திய சடங்கில் பங்குபற்றி எல்லா உதவிகளும் செய்து வந்தார். அதன் பின்புதான் ஜெர்மனி போக வெளிக்கிட்டார். நாங்கள் சொல்லி விட்டமாதிரி அவர் ஒரு வெள்ளைக்காரர் உதவியுடன் லண்டன் போய் சேர்ந்து அங்கிருந்து எங்களுக்கு லெற்றர் எழுதியிருந்தார் தான் லண்டன் வந்திருப்பதாகவும் இனி தனக்காக ஒருவரிடமும் உதவி கேட்ட தேவையில்லை என்று சந்தோஷமாக எழுதியிருந்தார். எங்களுக்கு அளவில்லா மகிழ்ச்சி. ரவியின் விருப்பமும் எங்கள் விருப்பத்தையும் நிறைவேற்றிய கடவுளுக்குத்தான் நன்றி சொல்வோம். பாலன் சைனா போனபின் TV மற்றும் முக்கியமான சிலசாமான்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தனுப்பியிருந்தார். வசந்தியும் ஒரு கொம்பனியில் வேலை செய்ய தொடங்கிவிட்டா. ரவியும் UK யில் இருந்து சில சாமான்கள் றேடியோ அம்மம்மாவுக்கும் சாறி இப்படியான சாமான்கள் கொடுத்தனுப்பியிருந்தார். இந்நாட்களில் சற்குருநாதன் சிங்கப்பூர் போவதற்கு இன்ரவியூக்கு வந்திருந்தார். ராசன் அவரை இன்ரவியூக்கு கூட்டிப் போனபோது இராசனையும் இன்ரவியூ பண்ணி எடுத்திட்டார்கள். இந்நாட்களில் பாலனும் இஞ்சினியர் படிப்பு முடித்துக்கொண்டு 81ம் ஆண்டு கொழும்பு வந்தார். இராசனின் செய்தியை அறிந்ததும் இங்கு ரயில்வே வேலையை விட்டு சிங்கப்பூருக்கு போகும்படி சொன்னதும் இருவரும் சிங்கப்பூர் போட்டார்கள். பாலனும் அமெரிக்கா போட்டார். அவர் வரும்போது வீட்டுக்கு தேவையான பல சாமான்களும் கொண்டு வந்திருந்தார். இந்தியும் வசந்தி வேலைசெய்யும் கம்பனியில் வெலை செய்தான். 82ம் ஆண்டு பெரியப்பாவின் மகள் கலா கட்டுபெத்தையில் படிக்கும்போது ஒரு பையனை விரும்பியிருந்தா். இருபகுதியும் சம்மதம் தெரிவித்ததும் யாழ்பாணத்திலிருந்து கலாவின் அப்பாவும் அம்மாவும் எங்கள் வீட்டுக்கு வந்து கலாவின் கலியாணத்தை கப்பிகாவத்தை கோயிலில் சிறப்பாக செய்து வைத்தோம்.

கதிர்காமம் கொடியேறினால் தீர்த்தம் முடியும் வரை விரதமிருப்பொம் (68-69ம் ஆண்டு) காலத்தில் கதிர்காமம் கொடியேறினால் மருதானையிலிருந்து CGR Booking Office என்று பெரிய கோச் ஒன்று கதிர்காமம் போய் ஆற்றுக்கு பக்கமாக இருக்கம் ஒரு School லில் போய் நிற்கும். இந்த கோச்சில் மாத்தறைபோகும் பஸ்சிற்கும் மாத்தறையிலிருந்து மருதானை மட்டும் போகும் ரெயின் டிக்கட்டும் கொடுப்பார்கள். இதனால் மாத்தறை போய் அங்கு கஸ்ரப்படாமல் ரெயின் எடுக்க வசதியாக இருக்கம். கோச்சில் வேலை செய்பவர்களுக்கு வசதியாக அந்த ஸ்கூலில் ரெம்பிரறி றூம் பொட்டு கொடுப்பார்கள். அந்நாட்களில் கோயிலுக்குப்பக்கத்தில் இராமகிருஷ்ணமிஷன் என்று பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடம் இருக்கு இந்த மடத்தில்தான் சாதிமதபேதமின்றி எல்லோரும் போய் தங்குவார்கள். சாப்பாடு எந்த நேரமும் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். அங்கு சாப்பாட்டுப்பகுதிக்கு தலைமையான முனியாண்டி என்பவர் எங்களுக்கு நல்ல பழக்கம். அவர் இங்கு ரெயில்வேயில் வேலை செய்யும் அனைவருக்கும் சாப்பாடு, கோப்பி என்று தாராளமாக அனுப்பி விடுவார். இந்த டியூட்டிக்கு கட்டாயமாக அப்பா போவார். சில சமயங்களில் நானும் பிள்ளைகளும் போயிருக்கிறோம். அங்கு கோயிலின் அப்பா ஒரு நாளைக்கு பிரதட்டை, கற்பூரச்சட்டி, எடுக்கிறது, காவடி எடுக்கிறமென்று ஒவ்வொரு நேர்த்தியையும் முடித்துக்கொள்வார். பக்க உதவிக்கு நானும் நிற்பேன். சிலசமயம் அக்கோச்சிலேயே மருதானை வருவோம். அப்பா கந்தஷட்டி விரதமும் ஒவ்வொரு வருசமும் முறைப்படி பிடிப்பார். நானும் வைகுந்த ஏகாதசி விரதம் 15 வயதிலிருந்து 64 வயது வரை ஒரு குறையுமின்றி முறைப்படி பிடித்து வந்தேன். எங்களைப் பின்பற்றி எங்கள் பெண்பிள்ளைகள் இவ்விரதம் இருக்கிறார்கள். எல்லாவற்றிக்கும் கடவுள் துணை புரிவார். அரசாங்கம் மாறியபின் இராமகிருஷ்ண மடத்தை அரசாங்க கோயில் தர்மகர்த்தாமாருக்கு தேவையென்று எடுத்திட்டுது. ஆட்கள் தங்கவென்றால ஆற்றுக்கு வெளியில் தான் றூம் எடுத்து இருக்கவேணும். பஸ்சுக்கு ரெயினுக்கு டிக்கெட் கொடுக்கும் ரெயில்வேயும் தேவை இல்லை என்று நிப்பாட்டி விட்டார்கள்.

83 ஆண்டு இனக்கலவரம் நடந்ததும் கதிர்காம திருவிழா நாட்களில்தான் இந்த வருசம் அப்பாவும் இந்தியுமாக போயிருந்தார்கள். அங்கே இனப்பிரச்சனை வரும் என அறிந்து தீர்த்தத்திற்கு முதலே அங்கிருந்து , கொழும்புக்கு வெளிக்கிட்டார்கள். கொழும்பு வரும் பஸ்சில் ஏறியதும் அந்த பஸ் சுணங்கி வெளிக்கிடும் என்றதும் வேறு பஸ் எடுத்து கொழும்பு வந்திட்டினம். இவர்கள் முதல் ஏறிய பஸ் சுணங்கி வந்ததால் அதில் வந்த தமிழரை இறக்கி அடித்து துன்புறுத்தியதாக அறிந்தோம். கடவுன் தான் தங்களை மற்ற பஸ்சில ஏற்ற அனுப்பினார் என்று அப்பா சொல்வார். பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் கொழும்பில் கலவரம் தொடங்கி விட்டது. கடைகள் வீடுகள் எரிந்து புகைமண்டலமாக இரந்தது. இரண்டு நாட்களுக்க முன்னுக்கு சேனாதிபெரியப்பா மகன் ஜெர்மனியிலிருந்து வருவதாகவும் பணம் தேவைப்பட்டாலுமென்று பத்தாயிரம் ரூபாவும் கொண்டு வந்திருந்தார். உங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வசந்தி, சுகந்திதான் அழுதபடி Hall லில் இருக்கம் TV குத்துவிளக்கு இப்படியான சில சாமான்களை எடுத்து றூமுக்குள் வைத்தார்கள். இதற்குள் காடையர் இரும்பு பொல்லு, கத்தி என்று ஒவ்வொருத்தர் கையிலும் ஏந்தியபடி சத்தம் போட்டுக்கொண்டு வருவதை எங்கள பல்கனியில் நின்று பார்த்தவுடன் வசந்தி ஆட்கள் என்னை தனிய விடாமல் தங்களுடனே நிற்கும்படியும் செத்தால் ஒருமிக்கசாவோம் என்றும் அப்பா என்ன செய்வதென்று தெரியாமல் முருகா, முருகா என்று கும்பிட்டபடியே நின்றார். இதற்குள் அந்த காடையர் கீழுக்கு இருந்த வீட்டுக்காரர் சிங்களவர் என்றதும் மேலுக்கு எங்கள் வீட்டுக்கு வரும் சத்தம் கேட்டது. அவர்கள் எங்கள் வீட்டுக்கு எதிர்ப்பக்கமாக உள்ள கதவை தட்டி கேட்டதும் அவர்களும் சிங்கள ஆட்கள். பின் எங்கள் வீடடை காட்டி கேட்டதும் அதுகும் சிங்கள ஆட்கள் என்று அவர்கள் சொன்னதும் எங்கள் கதவில் உள்ள பெயரை வாசித்து பார்த்ததும் பெயரின் கடைசி எழுத்து அழிந்திருந்ததால் கண்ணுத்துற என்று சிங்கள பெயர் மாதிரி இருந்தபடியால் அவர்கள் எல்லோரும் மேலுக்கிருக்கும் வீட்டுக்கு போயிட்டார்கள். அங்கு ஒரு தமிழ் வீடு இருக்கு 3 பேர் மட்டும்தான் இருக்கிறார்கள் அவர்கள் பயந்து கிச்சினுக்கு பின்புறத்தில் இருக்கும் ரொயிலற்றுக்குள் ஒளிந்திருந்தார்கள். போனவர்கள் அங்குள்ள சாமான் அலுமாரி எல்லாவற்றையும் யன்னல்களையும் உடைத்து எல்லாவற்றையும் சேதப்படுத்தி விட்டு கீழேபோய்விட்டார்கள். வந்தவர்கள் வெளியூர் ஆட்கள் இந்த வீட்டு அமைப்புபற்றி தெரியாது. தெரிந்த ஆட்களென்றால் பின்பக்கமாக போய் அவர்களை அடித்திருப்பார்கள். அவர்கள் போனபின்தான் எங்களுக்கு தொண்டையில் உமிழ் நீர் வந்தது. நாக்கு வறண்டு கதைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் இருந்நது. இத்தனைக்கும் தம்பி லோகேந்திரனை காணவில்லை. தேடிப்பார்த்ததில் பல்கனியில் றேடியோ இருந்தது. றேடியோவை வைத்திட்டு பின் பக்கத்தால் இறங்கி இஞ்சின் றைவேஸ் குவாட்டசிற்கு போயிருக்கிறார். எல்லா அமளியும் முடிந்தபின் அந்த றைவைர் ஆட்கள் பிள்ளையை பத்திரமாக வைத்திருந்து கூட்டி வருகிறோம் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு ஏன் எங்களை விட்டு தனியேபோனனி என்று கேட்டதற்கு நான் ஒரு ஆள் என்றாலும் தப்பி இருந்தால் தானே அண்ணா ஆட்களுக்கு சொல்ல முடியும் என்றார்.

இதன்பிறகு அடுத்தநாள் குவாட்டஸ்சில் இருக்கம் அனைவரும் வந்து 2-3 நாளைக்கென்றாலும் வேறு பாதுகாப்பான இடத்தில் போய் தங்கும் படி கேட்டார்கள். வீட்டில் ரவி அனுப்பியிருந்த சாமான்கள் பாலன் கொண்டு வந்த சாமான்கள் என்று நிறைய இருந்தது. எல்லா சாமான்களையும் பத்திரமாக வைத்திருக்கம் படி பகிர்ந்து எல்லா வீட்டிலும் கொடுத்தோம். ஆனால் குத்துவிளக்குகளை ஏற்க மறுத்திட்டினம். காரணம் குத்துவிளக்கு தமிழ் ஆட்கள் தான் வைத்திருப்பார்கள் என்று மற்றும் சாமான்களை அலுமாரிக்குள்ளும் பெட்டுக்கு கீழேயும் வைத்திட்டு கொஞ்ச உடுப்புக்குளை மாத்திரம் எடுத்தக்கொண்டு றெயில்வே ஜீப்பில் ஏறி எங்கே போவதென்று யோசித்து மருதானை பொலிஸ் இன்ஸ்பெக்ரர் மகள் சுகந்தியுடன் படிக்கிறவ 2 நாளைக்க தங்குவதற்கு அவர்களை கேட்டு அங்கு போனோம். நாங்கள் ஒரு சின்ன நாய் வளர்த்தோம். அதை வீட்டில் விட்டு சாப்பாடும் வைத்திட்டுதான் வெளிக்கிட்டோம். அன்று இரவு இன்ஸ்பெக்ரர் வீட்டில் தங்கி காலையில் நாயை பார்ப்பதற்காக அப்பாவும் இந்தியும் குவாட்டஸ்சுக்கு போனார்கள். நாங்கள் வந்ததும் அன்றிரவே வீட்டுக்கு தீ வைத்திட்டார்கள். தீ அணைக்கும் படைவந்து தான் தீ அணைத்தார்கள் என்று சொல்லக்கேட்டு உள்ளே போய்ப்பார்த்த போது ஒரு றூமுக்குள் இருந்த அலுமாரி 2 பெட் அங்கு வைத்துக்போன பலசாமான்கள் எல்லாம் எரிந்து சாம்பலாகி இருந்தது. எங்கள் நாய்க்கு லக்கி என்றுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிடுவோம் அது பாதுகாப்பாக அடுத்த றூமுக்குள் பதுங்கியிருந்திருக்கு அப்பாவையும் இந்தியையும் கண்டவுடன் ஓடிவந்ததும் அதையும் கூட்டிக் கொண்டு அப்பா தனது Office க்கு போனதும் இந்த நாயை தங்களிடம் தரும்படி எவ்வொருவரும் கேட்டார்களாம். அப்பா தன்னுடன் வேலை செய்த ஒருவரிடம் கொடுத்திட்டு வந்தார். பொலிஸ்ஸ்ரேசன் குவாட்டஸ்சில் எங்களைப் போன்ற தமிழ் ஆட்கள் தங்களுக்கு தெரிந்த ஒவ்வொருத்தர் வீட்டிலும் தங்கியிருந்த படியால் புதிதாக வந்திருக்கும் அனைவரையும் கூட்டிக்கொண்டு அகதி முகாமுக்கு போனார்கள். அங்கும் ஆட்கள் நிரம்பியிருந்தபடியால் கொள்ளுப்பிட்டி மகானாம ஸ்கூலில் விட்டார்கள். அங்கும் ஆட்கள் நிறையப்பேர் இருந்தார்கள். ஒரு பக்கத்தில் எங்களுக்கும் இடம் கிடைத்தது. அன்றிரவு அங்கு தங்கி காலையில் எழுந்ததும் இந்தியும் தம்பியுமாக கொள்ளுப்பிட்டியிலிருக்கும் எங்கள் சொந்தக்காற வீட்டுக்க போய் விபரத்தை சொன்னதும் அவர்கள் தங்கள் வீட்டில் வந்து தங்கும்படி சொன்னார்கள். நானும் வசந்தி, சுகந்தி, தம்பி அவர்கள் வீட்டில் தங்கினோம். அப்பாவும் இந்தியும் மருதானை குவாட்டஸ்சில் தங்கினார்கள். சேனாதி பெரியப்பா தன்மகள் வீட்டுக்கு போய் விட்டார். இந்த இடைப்பட்ட நாட்களில் எங்கள் வீட்டில் உள்ள குத்துவிளக்கு, கதிரை, கட்டில் என்று அனேக சாமான்கன் எடுத்துப்போய் விட்டார்கள். அங்கிருக்கும் சிங்கள ஆட்களும் இதை தடுக்கவில்லை. அடுத்த தமிழ் ஆட்கள் வீட்டை விட்டு போய்விட்டார்கள். அனேகமான தமிழ் ஆட்கள் அகதிமுகாமிலிருந்து கப்பல் மூலமாக காங்கேசன் துறைக்க போனார்கள். நாங்கள் கடைசியாக வெளிக்கிட்ட ரெயினில் யாழ்ப்பாணம் போனோம். அங்கு 2 மாதம் இருந்த பின் எங்கள் குவாட்டசும் திருத்தி விட்டார்கள். நாட்டு நிலமையும் சீராகிய பின் வேலைக்க வரும்படி கேட்டிருந்தார்கள். திரும்ப மருதானை வந்தோம். சுகந்தியுடன் படித்த பிள்ளைகள் இந்தியாவில் படிக்க போகும் போது சுகந்தியையும் கேட்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84ம் ஆண்டு இராசனும் சிங்கப்பூரிலிருந்து வந்தான். இங்கு நடந்த விசயங்கள் அறிந்திருந்தபடியால் வரும்பொது நிறைய சாறிகள், பிளவுஸ், வேட்டி மற்றும் சாமான்கள் கொண்டு வந்தான். இந்த நேரம் கலா-மதி ஆட்கள் இந்தியா போய்வர ஆயத்தமானார்கள். சுகந்தியும் தனக்கு தேவையான சாறிகள் மற்றும் சாமான்களுடன் கலா அக்காவுடன் இந்தியா போனா. அவர்கள் கூட்டிப்பொய் அந்தப்பிள்ளைகளுடன் சுகந்தியையும் சேர்ந்திருக்கவிட்டு வந்தார்கள். இராசனும் சிலமாதத்தின் பின் ஜெர்மனிக்கு போட்டான். அங்கு சிவராசனுடன் இருந்து பின்னர் லண்டனுக்கு ரவியுடன் போய் சேர்ந்திட்டான். பின்னர் சுகந்தியின் நிலைமையை அறிந்து வர எண்ணி இங்கு வசந்திக்கும் தம்பிக்கும் உதவியாக இருப்பதற்கு எங்களுக்கு பழக்கமான பேபி குடும்பத்தை இருக்க விட்டு நாங்கள் இந்தியா புறப்பட்டோம். அங்கு எங்களுக்கு தெரிந்த ஒருவருடன் சுகந்தி இருக்கும் வீட்டுக்குபோனோம். எங்களை கண்டதும் சுகந்திக்கு அளவிலா மகிழ்ச்சி எங்களுடன் தானும் வந்து hotel தங்கப்போவதாக சொன்னா. சரி என்று கூட்டி வந்தோம். எங்களுக்கு தெரிந்த நண்பர் ஆறுமுகம் hospital லில் வேலை செய்பவர். மதுரை DSP யின் வீட்டில் ஒரு அனெக்ஸ் றென்ருக்கு சுகந்தி எடுத்து இருந்தார். சுகந்தியும் எங்களுடன் இருந்து School போய் வருவா. இந்நாட்களில் இந்தியும் கொழும்பிலிருந்து வந்து எங்களுடன் இருந்தான். DSP வீட்டு ஆட்களும் எங்களுக்கு நல்ல உதவி. சின்னக்காவின் மகள் பேபியும் நைஜீரியாவிலிருந்து இலங்கை போகும் வழியில் இந்தியாவுக்கு வந்து எங்களுடன் இருந்தார்கள். சத்தியா சின்னப்பிள்ளை எங்கள் வீட்டுக்கு வந்தபின் தான் அடி எடுத்த வைத்து நடக்கத் தொடங்கினவா. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தான் பிள்ளைக்கு காது குத்தினது. மீனாட்சி அம்மன் கோவிலில் நாங்களும் சுகந்தியும் ஒருமுறை M.S. சுப்புலட்சிமி தனது பெறா மகளுடன் கோவில் பிரசாரத்தல் பாட்டுப் பாடியதையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சிபுரத்தில் காமாட்சி கோவிலில் காஞ்சி காமகோடிகலை தரிசித்ததும் மறக்க முடியாத நிகழ்சிகள். இது என்றும் ஞாபகமிருக்கம். அவர்கள் கொழும்பு போனபின் நானும் அப்பாவும் சாயிபாபாவை தரிசித்து வர புட்டப்பத்திபோனோம். சுகந்தியும் இந்தியும் கோடைக்கானல் போயிருந்தார்கள. நாங்கள் புட்டப்பத்தி போய் பாபாவின் ஆச்சிரமத்திற்கு பக்கத்தில் றூம் எடுத்திருந்தோம். ஆச்சிரமத்திற்கு போவதற்கே காலை 7 மணிக்கு ஆட்கள் கூடி வரிசையாக நிற்பார்கள். எப்படியும் 7-8 கியூ இருக்கும். முன் வரிசையில் நிற்பவர் தான் டோக்கன் நம்பர் எடுப்பார். அந்த நம்பரிலிருந்துதான் ஆச்சிரமத்துன் போக விடுவார்கள் அங்கு மணற்தரையில் மதுரை வந்து சுகந்தியின் சாமான்களையும் எடுத்துக்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்தோம். பாலன் கொழும்பில் ஒரு கிழமை நின்றிட்டு திரும்ப USA போட்டார். சுகந்திக்கும் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்ற் கொலிஷ்சில் ரீச்சிங் போஸ்ற் கிடைத்து போய்வர தொடங்கி விட்டா. ரவிக்கும் லண்டனில் பெண்பார்த்து எல்லா ஒழுங்கும் செய்து 3.11.1990 கலியாணத்திற்கு நாள் வைத்து அங்கு எங்களை வரும்படி அறிவித்திருந்தார்கள். லண்டனில் எனது அக்கா பிள்ளைகள் எல்லா ஒழுங்கும் செய்திருந்தார்கள். இங்கு தம்பியை லண்டன் அனுப்புவதற்கு ஒழுங்கு செய்தோம்.

நாங்களும் UK போவதற்கு அப்ளை பண்ணி இன்ரவியுக்கு கூப்பிட்டிருந்தார்கள். பாலன்தான் எங்கள் ஸ்பொன்ஸர் பண்ணியிருந்தார். எம்பசியில் அப்பாவை மாத்திரம் இன்ரவியு பண்ணி எங்கள் இருவருக்கும் வீசா தந்திட்டார்கள். எங்களுக்கு பெரிய சந்தோஷம். இங்கு லண்டன் போவதற்கு எல்லா ஆயத்தங்களும் செய்து வீட்டில் பிள்ளைகளுக்க உதவியாக இருக்க எங்கள் குடும்பத்துடன் நெருங்கிய நண்பரான கெட்காட் செல்வராசையா குடும்பத்தையும் எங்களுடன் இருந்த வேலைக்காரப் பையனையும் உதவியாக இருக்க விட்டு நாங்கள் 20.10.1990 ல் லண்டனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டோம். லண்டனில் எங்களை பார்த்ததும் அனைவருக்கம் மட்டற்றமகிழ்ச்சி.

இந்நாட்களில் எங்கள் சொந்தக்காரர் ஒருவர் கனடாவுக்க ஆட்களை அனுப்பும் விசயமாக கொழும்புக்கு வந்தபோது எங்கள் வீட்டுக்கும் வந்திருக்கிறார். வசந்தி ஆட்கள் தம்பியின் நிலைபரத்தையும் அவரிடம் சொன்னபோது அவர் தம்பியின் அட்டுசை வாங்கிக் கொண்டு பாலனிடமும் இது விசயமாக தான் கதைப்பதாக சொல்லி சிங்கப்பூர் போய் தம்பியையும் சந்தித்து பாலனுடனும் கதைத்து தம்பியை கனடா கூட்டிப்போய் சேர்த்தார். கனடாவிலிருந்து தம்பி எங்களுடன் கதைத்து விசயத்தை சொன்னதும் பெரும் சந்தோஷமாக இருந்தது. எல்லாம் ஆண்டவன் செயல். ரவியின் கலியாணம் நவம்பர் 3ம் திகதி நடைபெற்றது. அதற்கு பாலுனும் UK வந்திருந்தார். என் அக்கா பிள்ளைகள், அவரின் அக்காவின் பிள்ளைகள் அனைவரும் முக்கியபங்கெடுத்து சிறப்பாக செய்து வைத்தார்கள். பாலனும் ரிஷப்ஷன் முடிந்தபின் USA போட்டார். மருமகள் சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர். லண்டனில் சகோதரங்கள் பெரியதாய் பிள்ளைகள் சிறிய தாய்மார் என்று லண்டனில் இருக்கிறார்கள். இராசனும் தான் வேலை செய்யும் இடத்தில் ஒரு போலிஷ் (polish) பிள்ளையை விரும்பினார். அந்தப்பிள்ளையும் இராசனை விரும்பி எங்கள் முடிவை அறிந்தபின் தனது தகப்பனார், சகோதரங்களையும் கூப்பிட்டு 91ம் ஆண்டு அவர்களின் திருமணத்தையும் எல்லோருக்கம் சொல்லி சிறப்பாக செய்து வைத்தோம். எங்களுக்கம் 6 மாத வீசா முடிந்தது. திரும்ப சிறீலங்கா போவதற்கு நாட்டு நிலமை சரியில்லாதபடியால் லண்டனில் தொடர்ந்திருக்க அனுமதி தந்தார்கள். தம்பியும் கனடா யோக்யூனிவசிற்றயில் படித்துக் கொண்டிருந்தார். கொழும்பில் திருச்செல்வத்தின் தம்பி மகேஸ்வரன் சுகந்தியை கல்யாணம் செய்ய விரும்பி தனது அண்ணரின் மூலமாக எங்களுடன் தொடர்பு கொண்டு எல்லா விபரத்தையும் சொல்லி எங்கள் சம்மதம் கேட்டார்கள். சுகந்தியின் விருப்பத்தை கேட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்க சம்மதம் என்றால் தனக்கம் சம்மதம் என்று சொன்னா. மாப்பிளையும் எங்களுடன் கதைத்து சுகந்தியை ஒரு குறையுமின்றி பார்த்துக் கொள்வேன் என்று தன் சந்தோஷத்தையம் தெரிவித்து எங்கள் ஆசீர்வாதத்துடன் கல்யாண எழுத்துக்கம் நாள் வைத்து ராமா வசந்தி ஆட்களும் யோகன் அண்ணாவும் சேர்ந்து சிறப்பாக செய்து வைத்தார்கள்.

பாலனுக்கு புறோக்கர் மூலமாக பம்பலப்பிட்டியில் இருக்கும் குணரட்ணம் என்பவரின் மகளுக்கு பொருத்தம் பார்த்து நல்லாய் இருந்தது. அவர்கள் குடும்பத்தில் ஒரு அக்கா 2 தம்பிமார். அக்கா டொக்டரக்கு படித்து முடித்திருந்தா. தம்பிமார் படித்துக் கொண்டிருக்கினம். தகப்பனார் பாலனுக்கு செய்வதற்கு விரும்பி எங்களுடன் தொடர்பு கொண்டு எங்கள் விருப்பத்தையும் அறிந்தபின் கல்யாண ஏற்பாடுகள் செய்தார்கள். வசந்தி, சுகந்தி ஆட்களும் பெண்பார்த்து தங்கள் விருப்பத்தையும் தெரிவித்ததார்கள். 93ம் ஆண்டு சிறீலங்கா போவது கஸ்ரமாக இருந்த படியால் ராமா, வசந்தி, சுகந்தி ஆட்கள் பாலனின் கலியாணத்தை சிறப்பாக முடித்து வைத்தார்கள்.

தம்பியும் தன்னுடன் படிக்கும் ஒரு பிள்ளையை விரும்புவதாக பாலன் மூலமாக எங்களுக்கு தெரியப்படுத்தியிருந்தார். அப்பிள்ளையின் அம்மாவும் எங்களுடன் தொடர்பு கொண்டு முழுவிபரங்களும் சொன்னா. மானிப்பாயை சேர்ந்தவர்கள் என்றும் அப்பா இறந்திட்டதாகவும் ஒருமகளும் ஒருமகனும் தான் இருக்கிறார்கள் என்றும் உங்கள விபரத்தை கேட்டு நாங்களும் சம்மதம் தெரிவித்ததும் நாங்கள் கனடா போய் அவர்களின் கலியான எழுத்தை வெகு சிறப்பாக செய்து சிலநாட்கள் அங்கு தங்கி வந்தோம்.

சுகந்தியும் தன் கலியாணம் எவ்வளவு சுணங்கினாலும் பரவாயில்லை அப்பா, அம்மா வந்துதான் செய்யவேணுமென்று சொன்னா. நாங்களும் யோசித்து பிரான்சில் சிலமாதம் நின்று வரக்கூடியதாக ஒழுங்கு பண்ணி 94ம் ஆண்டு அங்கிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு ரிக்கட் எடுத்துப்போய் சுகந்தியின் கலியாணத்தை நல்லபடியாய் முடித்துக்கொண்டு பிரான்ஸ் வந்து UK வந்தோம். எல்லோருக்கும் நல்ல சந்தோஷம்.

பின்னர் இந்திக்கும் புறோக்கர் மூலமாக பெண் பார்த்தோம். அவர்கள் வல்வெட்டியை சேர்ந்தவர்கள். 5 ஆண்சகோரதம், 2 அக்காமார் தற்போது தம்பியாருடன் UKயில் இருந்து படிப்பதாகவும் சொன்னார்கள். பொருத்தமும் சரியாய் இருந்தபடியால் கலியாணத்திற்கும் நாள் வைத்தோம். எங்களுக்கும் லண்டனில் நடக்கம் கடைசி கல்யாணமானபடியால் பாலனும் குடும்பத்துடன் வந்திருந்தார். தம்பியும் கனடாவிலிருந்து வந்திருந்தார். இங்கும் எல்லோருக்கும் சொல்லி வெகு சிறப்பாக கலியாணம் செய்து வைத்தோம்.

அதன்பின் தம்பியின் கலியாணமும் 95 ஆண்டு யூன் மாதம் கனடாவில் பெரும் விமரிசையாக நடைபெற்றது. இந்தியும் எங்களுடன் கனடா வந்திருந்தார். நாங்களும் கனடாவில் சிலமாதம் நின்று வந்தோம். கடவுள் துணையால் எல்லாப் பிள்ளைகளின் கலியாணங்களம் அவரவர் விருப்பப்படியே சந்தோஷமாக முடிந்ததையிட்டு எங்களுக்கு மனத்திருப்தியும் சந்தோஷமாகவும் இருந்தது.

நாங்கள் UK வந்தபின் UK சிற்றிஷன் கிடைத்தது மிகவும் சந்தோஷம். இந்நாட்களில் சிறீலங்கள் றெயில்வே பென்ஷனியஸ் ஒரு அசோசியேஷன் நடந்து கொண்டிருந்தது. அதை நல்ல படியாய் செயல்படுத்த முடியாமல் இருந்த போது அதற்கு தலைமை தாங்கி செய்யும்படி அப்பாவை கேட்டிருந்தார்கள். தனக்கு பொழுது போகவேணும் என்ற எண்ணத்துடன் அதை பாரமெடுத்து செயல்படதொடங்கினார். அப்பாவின் ஊக்கத்தினால் மெம்பஸ் கூடுதலாக வந்து அசோஷியேஷன் வளரத் தொடங்கிவிட்டது. பென்ஷன் கிடைக்காமல் இருந்த சில ஆட்களுக்கு பென்ஷன் கிடைக்ககூடியதாக இருந்தது. அதில் இருக்கும் மெம்பர்மார் சேர்ந்து ஒவ்வொரு இடங்களுக்கம் கோச்சில் ரூர் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார்கள். கிறிஸ்மஸ் பாட்டி வைபபார்கள். அதில் அமம்பர்மாரின் பிள்ளைகள், சிறு பிள்ளைகள் அனைவரும் வந்து பங்குபற்றுவார்கள். 10 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு பிரசென்ற் கொடுப்பார்கள். விளையாட்டுப்போட்டியில் 2 பேருக்கு பிறைஸ் கிடைக்கும். இப்படி பல விளையாட்டுக்களின் பின் நல்ல சாப்பாடு. இப்படி சந்தோஷமாக பொழுதுபோகும். இந்தமாதிரி அசோஷியேஷனின் 9 வருடமாக பிரசிரெண்டாக இருந்தார். பின் சுகயீனம் காரணமாக விலகிக்கொண்டார்.

நாங்கள் ஒரு முறை USA போயிருந்த போது தம்பி எங்களை வாஷிங்டினில் இருக்கும் விஷ்ணு கோவிலுக்கு அழைத்துச்சென்று இருந்தான். அப்போ பின்னேரம் ஆகி விட்டது. கோவிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு களைத்துப்போய் கீழே நிலத்தில் இருந்தோம். அப்போ அக்கோயிலின் குருக்கள் எங்களைப் பற்றி விசாரித்துச் சாப்பிட்டு விட்டீர்களா? எனக் கேட்டார். தம்பியும் இனித்தான் என சொல்ல இரவு கடையெல்லாம் பூட்டிவிடுவார்கள் என கூறி எங்களை தனது வீட்டிற்கு கூட்டிப் போய் சாப்பாடு தந்து, அடுத்த நாள் சாப்பிட புளிச்சாதமும் செய்து தந்தார். முன்பின் தெரியாத குருக்கள் எங்களிற்கு உணவு கொடுத்து உதவிய நிகழ்ச்சியும் எனக்கு மறக்க முடியாது.

எங்களுக்கு சிற்றிசென் கிடைத்தபின் சிறீலங்கா போய் இந்தியாவிலுள்ள அறுபடைகோயில்களை தரிசிப்பதற்கு மருமக்கள் பிள்ளைகளை கூட்டிப்போக எண்ணினோம். எங்களுடன் லீலாவதி என்ற பிள்ளையும் வர விரும்பினா. லீலாவை எங்கள் பிள்ளைகளில் ஒன்றாகத்தான் நேசித்தோம். ராமாவுக்கு லீவுகிடைக்காத படியால் ஒருகிழமை பிந்தி சென்னைக்கு வருவதாக சொல்லியிருந்தார். நாங்கள் மற்றும் அனைவரையும் கூட்டிக்கொண்டு திருவனந்தபுரத்தில் இறங்கி

இங்கிருந்து சென்னை வரை போவதற்கு பெரியகார் ஒழுங்குபண்ணி கன்னியாகுமரி தொடங்கி எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களுக்கும் வசந்தி, சுகந்தி பால் குடமெடுத்து தரிசித்துக் கொண்டு போனோம். இரவானதும் ஹொடேலில் தங்கி மறுநாள் காலை கோயில்களுக்கு போவோம். எல்லா கோயில்களுக்கும் வசந்தி, சுகந்தி பால் குடம் எடுத்துக்கொண்டு சென்னை போக 3 நாட்களுக்க மேல் ஆகிவிட்டது. அங்கு போனதும் காரை அனுப்பிவிட்டு ஹொட்டேலில் தங்கினோம். வசந்திக்கு டொக்டர் அப்போயின்மென் இருந்த படியால் அவ நீண்டதூரம் ரவல் பண்ணுவது கஷ்ரம் என்று வசந்திக்கு தெரிந்த சினேகிதர் வீட்டில் விட்டு நாங்கள் லீலாவுடன் திருப்பதி போய் வந்தோம். பின் லீலாவையும் எங்களுக்கு தெரிந்த ஆட்களுடன் விட்டு நாங்களும் சுகந்தி, மகேசும் புதுடெல்லிக்கு வெளிக்கிட்டு 2 நாட்களின் பின் டெல்லிபோய் சேர்ந்தோம். அங்கு முக்கியமான பல இடங்களையும் பார்த்துக்கொண்டு தாஜ்மகால், பிருந்தாவனம் என்று எல்லா இடங்களையும் பார்த்து ரசித்தபடி 2 நாள் நின்று சென்னை வந்தோம். மகேஸ், சுகந்தி, லீலா கொழும்பு புறப்பட்டார்கள். நாங்கள் சென்னையில் ஒரு வீடு ரென்ற் பண்ணியிருந்தோம். வசந்தியின் அப்பொயின்மன் இருந்தபடியால் வசந்தியை நாங்கள் கூட்டிக்கொண்டுபோய் Hospital லில் இருந்தோம். அடுத்தநாள் அவவுக்கு சிறு ஒப்பரேசன் நடக்க இருந்தபடியால் இரவு அங்கு தங்கினோம். மருமகனும் அடுத்தநாள் வந்திட்டார். நாலுநாளையில் வீட்டுக்கு வந்திட்டா. சென்னையில் ஒரு மாதம் தங்கி நல்ல குணமானபின் கொழும்புக்கு கூட்டிப்போய் விட்டு நாங்களும் UK வந்தோம்.

எங்கள் வாழ்க்கையும் சந்தோஷமாக போய்க் கொண்டிருந்தது. 2002ம் ஆண்டு எங்கள் 50 ஆவது திருமண நாளை பெருவிழாவாக கொண்டாடவேணுமென்று பிள்ளைகள் ஆசைப்பட்டு தாங்கள் ஒவ்வொருவரும் என்னஎன்ன வேலைகள் செய்வதென்று தீர்மானம் எடுத்து செய்தார்கள். வசந்தியைத் தவிர மற்றும் பிள்ளைகள் அனைவரும் குடும்பத்துடன் வந்திட்டார்கள். வசந்திக்கு வீசா கிடைக்காத படியால் வரமுடியவில்லை. சுகந்திக்கு மாத்திரம் கிடைத்தது. வசந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராதது எல்லோருக்கும் கவலைதான். என்ன செய்வது ஏதாவது ஒருகுறை இருக்கத்தானே செய்யும். எங்கள் பிள்ளைகளுடன் அக்காவின் பிள்ளைகள் மற்றும் அவரின் அக்காவின் பிள்ளைகள் அனைவரும் உதவி செய்தார்கள். சொந்தக்காரா, சினேகிதர், றெயில்வே ஆட்கள் என பல பேர் வந்திருந்தார்கள். தம்பி லோகேந்திரனும் சுகந்தியும் தங்கள் சகோதரங்களையும் அண்ணிமாரையும் முறையே பெயர் சொல்லி மேடைக்கு அழைத்து அறிமுகப்படுத்திய விதம் எல்லோர் மனதையும் கவர்ந்தது. தம்பி கவிதை எழுதி வாசித்தார். அதை எல்லோரும் பாராட்டினார்கள். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரும் எங்களை சுற்றி இருந்து இன்பக்கடலில் மூழ்கவைத்தார்கள். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கமைய எல்லோர் மனதையும் கவரக்கூடிய வகையில் சிறப்பாக செய்தார்கள். இதை என் வாழ்க்கையில் மறக்கமுடியாது.

பின்னர் நவம்பரில் இரண்டாவது மருமகன் கடும் சுகயீனமாக கோமாவில் இருப்பதாக அறிந்ததும் டிசம்பர் 1ம் திகதி நாங்கள் சிறீலங்கா போனோம். அங்கு போகும்வரை மனநிம்மதியே இல்லை. ராமாதான் வரவேற்றார். அவரிடம் சுகம் விசாரித்துபோது இன்று தான் கண்விழித்துப் பார்த்தார் என்று சொன்னதும் பெரும் ஆறுதலாக இருந்தது. Hospital போய் அவருடன் கதைத்தோம். அவரின் கிட்னி வேலை செய்யவில்லை றான்ஸ்பிளான்ஸ் பண்ணினால்தான் சுகப்படும் என்பதை அறிந்தபின் அவரின் உடம்புக்கு சேரத்கூடியதாய் கிட்னி கிடைப்பது கஸ்ரமாய் இருந்தபடியால் அவரை இந்தியாவுக்கு கூட்டிக்கொண்டு போய் Hospital லில்வைத்திருந்து பல புறோக்காமார் மூலம் விசாரித்தும் கிடைக்கவில்லை. ஒரு மாதமிருந்து பார்த்தபின் சுகந்தி எங்களை UK போகும்படியும் தான் நின்று எல்லாம் செய்வதாக சொன்னா. அதன்படி அவருக்கு சேரக்கூடிய கிட்னி கிடைத்து ஓப்பரேஷன் நடந்தது. வசந்தி, மகேசின் அண்ணா ஆட்கள் உதவியாக நின்று சுகமானபின் கொழும்பு கூட்டி வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ம் ஆண்டு நாடு கொஞ்சம் சீருக்க வந்தபின் நாங்கள் கொழும்பு போய் ராமா வசந்தி, சுகந்தி அனைவரையும் யாழ்ப்பாணம் கூட்டிப்போய் அங்குள்ள நோத்தியையும் முடித்துக்கொண்டு ராமா முதல் முறையாக இப்போதான் யாழ்ப்பாணம் வந்திருந்தார். ஆனபடியால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் எல்லா கோயில்களையும் தரிசித்துக்கொண்டு சொந்தக்காரர்களையும் பார்த்துக்கொண்டு வந்தோம். மூத்த மருமகன் ராமச்சந்திரனை அனைவரும் முதன்முறையாக இப்போதான் பார்த்தார்கள். நாங்களும் எல்லோரையும் பார்த்த திருப்தியுடன் கொழும்பு வந்தோம். இதன்பின் அப்பாவுக்கு சுகமில்லாமல் இருக்க கொஸ்பிற்றலில் செக் பண்ணி பார்த்துபோது இதயத்தில் 3 block இருப்பதாகவும் பைப்பாஸ் ஒப்பரேசன் செய்யவேணுமென்று சொன்னார்கள். நாங்கள் லண்டனில் செய்வதாக சொல்லி UK வந்து கொஞ்ச நாளையில் பைப்பாஸ் ஒப்பரேஷன் செய்து சுகமாகி இருந்தார். அதன்பின் தம்பியும் USA வந்து தன்னுடன் கொஞ்ச நாளைக்கு நிறுகும் படி கேட்டார். அங்கு போய் 2 மாதம் நின்று வந்தோம். இதற்கிடையில் சுகந்தியும் இந்தியாவில் இருந்தா. அவவுக்கு நவம்பரில் பிள்ளை கிடைக்க இருந்தபடியால் எங்களையும் இங்கு வரச்சொல்லி நல்ல வசதியான வீடும் எடுத்து இருந்தா. அப்பாவுக்கு அவ்வளவு நல்ல சுகமில்லை ஆனாலும் சுகந்தியின் குழந்தைகளை பார்க்க வேணுமென்று ஆசைபட்டிருந்தார். அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அவருக்கு உதவியாக நின்று இந்தியா கூட்டிப்போய் இங்கு 2 மாதம் இருந்தோம். சுகந்திக்கு 2 ஆண் குழந்தைகள் நவம்பர் 26ல் பிறந்தார்கள். பிள்ளைகளைப் பார்த்ததும் அப்பாவுக்கு நல்ல சந்தோஷம். அதன்பிறகு அப்பாவுக்கு டயறியா வந்து குணமாகினதும் நடக்க கஸ்ரப்பட்டார். வாக்கிரின் உதவியினால் நடப்பார்.

பிள்ளைகளின் துடக்குகளிவிலும் குழந்தைகளை தூக்கி மடியில் வைத்திருந்தார். ரவியும் லண்டனுக்கு அப்பாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிப்போக உதவியாக வந்திருந்தார். நாங்களும் UK வெளிக்கிட வசந்தி ராமா ஆட்களும் சுகந்தி பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு சிறிலங்கா போனார்கள். அப்பா சுகந்தியின் பிள்ளைகளை தூக்கி வைத்திருந்ததும் பிள்ளைகளை ஆசீர்வதித்ததும் அவரின் ஆசை நிறைவேறினதும் பக்கபலமாய் நின்று நான் உதவியதும் எனக்கு மனத்திருப்தி. எல்லாம் ஆண்டவன் துணை.

லண்டனில் அப்பாவை செக் பண்ணிபார்த்தபொது ஒரு காலுக்கு இரத்தோட்டம் போவது குறைவாக இருப்பதாகவும் அதனால் தான் நடக்க கஸ்ரமாக இருப்பதாகவும் பேஸ்மேக்கர் செய்தால் இரத்தோட்டம் நல்லாய் இருக்கம் பழையபடி நடக்க முடியுமென்று ஒப்பரேசன் செய்தார்கள். அதன்பின் கஸ்ரமின்றி வாக்கரை பிடித்து நடப்பார். சுகமாய் லீட்டுக்கு வந்தார். இந்தி வீட்டில் படி ஏறி இறங்குவது கஸ்ரமாய் இருந்தபடியால் இராசன், அனா தங்களுடைய வீட்டில் வந்து எங்களை இருக்கும்படி கூட்டிபபோனார்கள். அவர்கள் வீட்டில் கீழுக்கே எல்லா வசதியும் இருக்க. படிஏறத் தேவையில்லை. எங்கள் பிள்ளைகளின் வீடுகள் கிட்டக்கிட்டத்தான் இருக்க.

ஆண்டவன் கருணையால் எங்க்ளுக்கு பத்துப்பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுள் அருமை பெருமையாக ஒரே ஒரு பேத்திமாத்திரம் இருக்கிறா (எங்கள் கடைசி மகன் லோகனின் மகள்). அவ படிப்பிலும்சரி பரதநாட்டியம், விளையாட்டு, நீச்சல் இப்படி எல்லாத்துறைகளிலும் முதன்மையாக இருக்கிறா. மற்றும் பேரப்பிள்ளைகள் அனைவரும் எல்லாவற்றிலும் முதன்மையாகஇருக்கிறார்கள். ஒரு பேரன் யூனிவசிட்டியில் இருக்கிறார்.

இப்படி ஒவ்வொருத்தரும் முன்னேற்றப்பாதையில் போய்க்கொண்டிருக்கினம். எல்லாம் கடவுள் துணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவும் வீட்டுக்கு வந்தபின் கொஞ்சகாலம் நல்ல சுகமாய் இருந்தார். பின்னர் ஒரு நாள் சோர்ந்து களைத்து மாதிரி இருந்தபோது என்ன செய்யுது என்று கேட்டாலும் எனக்கொன்றும் இல்லை என்று சொல்வார். வழக்கம் போல பகல் சாப்பிடும் போது சோர்வாக இருந்தபடியால் நான்தான் ஸ்பூனால் தீத்தி விட்டேன். சாப்பிட்டபின் எல்லோரிடமும் கதைத்துக் கொண்டிருந்தார். மாலை 6 மணிபோல டொக்டர் வந்து பார்த்து அவருக்கு கொடுக்கும் ரபிலட்சில் 3 மருந்தை நிற்பாட்டும் படி சொல்லிப்போனார். அப்பா தனக்கு பசிக்கவில்லை. இரவு சாப்பாடு வேண்டாம் என்று கொர்லிக்ஸ் மாத்திரம் குடித்து விட்டு படுத்திட்டார். இரவு 1 மணி போல தனக்கு வேர்க்கிறதாகவும் துடைத்து விடும்படி கேட்டார். எல்லாம் துடைத்தபின் தண்ணீரும்கொடுத்தபின் என்னசெய்யுது என்று கேட்க எனக்கு ஒன்றும் இல்லை நீங்க போய் படுங்கோ என்று சொன்னார். பின்னர் 3½ மணிபோல் எழுப்பிப் பார்த்துபோது அப்படியே சோர்ந்து போனார். போர்த்தபோர்வை அப்படியே இருக்க. எழுப்பிப் பார்த்தால் ஒரு பேச்சும் இல்லை. சோர்ந்து போய் இருந்தது. பிள்ளைகள் கூப்பிட்டு அவர்களும் வந்து பார்த்து டொக்டருக்கு அறிவித்து அவரும் வந்து ரெஸ்ற் பண்ணி பார்த்து என்றும் செய்ய முடியாது என்று கைவிரித்தார். என்னால் நம்ப முடியவில்லை. 1 மணி போல என்னுடன் கதைத்து தண்ணீரும் குடித்தவர் கொஞ்சநேர இடைவெளியில் பக்கத்தில் இருந்த எனக்கு ஒரு சத்தமும் இல்லாமல் எல்லொரையும் விட்டு நிம்மதியாக போனதை என்னால் நம்பவே முடியவில்லை.

எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் எவ்வளவு பேர் இருந்தாலும் அந்த இடத்தை நிரப்பமுடியாது. இப்போ நான் சிறகொடிந்த பறவைபோல் ஆகிவிட்டேன். அப்பாவின் ஆத்மா சாந்தியடைய கடவுளை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலியும்
# நன்றி நவிலலும்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து எம்மை விட்டு இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் **அமரர் திருமதி கண்ணுத்துரை பூபதியம்மா** அவர்களின் மறைவின் போது எங்கள் இல்லங்களுக்கு ஓடோடிவந்து, எங்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தம் அனுதாபச் செய்திகளை நேரிலும், தந்திகள் மூலமும், கடிதங்கள் மூலமும், தொலைபேசி மூலமும் தெரிவித்த அனைவருக்கும் பல்வேறு வழிகளில் எம்முடன் நின்று உதவி ஒத்தாசைகள் புரிந்த நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் வேண்டிய உதவிகளை வேண்டியவாறு செய்து அவரின் இறுதிக் கிரியைகள், இறுதியாத்திரை ஆகியவற்றில் கலந்து கொண்ட அனைவருக்கும் மலர் வளையங்கள், மலர்ச்செண்டு அனுப்பிய அன்பு உள்ளங்களுக்கும், அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் இந்த நினைவு மலருக்கான ஆக்கங்களை எழுதியவர்கட்கும் மலரை அழகுற அச்சமைத்த JR Print (UK) நிறுவனத்தினருக்கும் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிய அனைவர்க்கும் எங்கள் உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print-London, www.jrprint.com T : 0208 503 6643